விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO


சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 08 செவ்வாய்க்கிழமை (24.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

# புலிகளுக்கோ சர்வதேசத்துக்கோ அரசு அடிபணியப் போவதில்லை!

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வீராப்பு

(கொழும்பு)

புதைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் இன்றுவரை மீட்கப்படுகின்றன. இந்நிலையில் அவசரகாலச் சட்டம் அவசியமாகிறது. இதனை நீக்குமாறு எவரும் கோர முடியாது. புலிகளுக்கோ எந்தவொரு நாட்டுக்கோ அரசாங்கம் அடிபணியப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (18ஆம் பக்கம் பார்க்க)



பக்த வெள்ளத்தில் தேரில் வலம்வரும் சந்நிதியான்...

## மாவட்டங்களுக்கிடையே வழங்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தை இடைநிறுத்தி மீள்பரிசீலனை செய்ய ஆளுநர் பணிப்பு

(வவுனியா)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் அண்மையில் மாவட்டங்களுக்கிடையே வழங்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தை இடைநிறுத்தி கல்வி வலய ரீதியாக மீள்பரிசீலனை செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பணிப்புரை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களிற்கான வருடாந்த மீளாய்வுக் கூட்டம் நேற்று வவுனியாவில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திலேயே வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் அவர் இப் பணிப்புரையை (18ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியம் 200 மில். டொலர் கடனுதவி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் அடுத்த மாதத்தில் இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை (23 பில்லியன் ரூபாய்கள்) கடனாக வழங்கவுள்ளது.

இது இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்க இணங்கிக் கொண்டுள்ள 2.6 பில்லியன் டொலர்களின் (300 பில்லியன் ரூபாய்கள்) ஒரு கட்ட கடனுதவியாகும்.

கொழும்புக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஆசியப் பசுபிக் திணைக்கள தலைவர் பிரைன் எயிட்கன், நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் (18ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



### வந்தவர் உடனேயே திரும்பிவிட்டார்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்தார். நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்ததை அவரது ஊடகப்பிரிவு அறிவித்தது. இவ் விஜயத்தின்போது மேர்வின் சில்வா (18ஆம் பக்கம் பார்க்க)

## செல்வச்சந்நிதி தேர்த் திருவிழாவில் 13 தங்கச் சங்கிலிகள் அபகரிப்பு!

(தொண்டைமானாறு)


தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களின் 13 சங்கிலிகளும் ஒரு தாலிக் கொடியும் திருடர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வரலாற்று புகழ்மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம் பெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் பெருமளவான பறவைக்காவடிகள், (18ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் காணிகள் சுவீகரிக்கப்படுவது சிங்களவர்களை குடியேற்றுவதற்கல்ல



### ஆயர்களிடம் அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றமை, சிங்களவர்களை குடியேற்றுவதற்கல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் கத்தோலிக்க ஆயர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது. (18ஆம் பக்கம் பார்க்க)


## மகிந்த – ரணில் மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது ஏற்கனவே இருவரும் பரிமாறிக் கொண்ட அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முக்கியமாக முன்னர் இருவரும் இணங்கிக்கொண்ட (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தேர்த் திருவிழாவில் விநாயகப் பெருமான், முருகப் பெருமான் சகிதம் தேரில் ஆரோகணிப்பதற்காக வருவதையும் பக்தர்களின் அரோகரா ஒலிக்கு மத்தியில் விநாயகர் மற்றும் முருகப் பெருமான் தேரில் திருவீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.

# அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் தமிழ்க் கூட்டமைப்பு புறக்கணிப்பு

## திட்டமிட்ட செயல் என்கிறார் செல்வம் எம்.பி.

(வவுனியா)

வவுனியா, மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான அழைப்புத் தங்களுக்கு அனுப்பப்படவில்லை என்றும் தம்மை வேண்டுமென்று ஓரம்காட்டவே இவ்வாறு செயற்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கு முன்னர் நடைபெற்ற முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு எமக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்ததாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அந்த அழைப்பினை ஏற்று நாம் அந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டோம். ஆனால் கடந்த வாரம் இடம்பெற்ற மன்னார், வவுனியா அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் நாம் கலந்து கொள்வதற்கான அழைப்பினை குறிப்பிட்ட மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் எமக்கு அனுப்பி வைக்கவில்லை.

இது எமக்கு வேதனையையும் கவலையையும் அளிக்கிறது. எமது மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் முன்வைத்துத் தீர்வுகளைக் காண்பதற்கே நாம் விரும்புகின்றோம். இந்த அடிப்படையிலேயே தொடர்ந்தும் நாம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு வந்தோம்.

ஆனால் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பாடமையே எம்மையும் எமது மக்களையும் ஓரம்கட்டும் முயற்சியாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

இது தொடர்பில் நாம் குறிப்பிட்ட இரு அரசாங்க அதிபர்களுக்கும் எழுத்து மூலம் எமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவுள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ச-5)

## எச்-1என்-1 வைரஸ் பரவும் ஆபத்து

(இந்தியா)

இந்தியாவில் எச்-1என்-1 வைரஸ் பரவியுள்ளதால் இலங்கையிலும் பரவக் கூடிய ஆபத்துக் காணப்படுவதாக இலங்கை தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் உலக சுகாதார அமைப்பு வழங்கிய 4 இலட்சம் வெஸ்லின் ஊசி மருந்துகளை நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இடமாற்றத்தை விரும்பாத ஆசிரியர்கள் மேன்முறையீடுகளைச் செய்யுமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றத்தை விரும்பாத தமிழ் ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவர்களை உடனடியாக மேன் முறையீடு செய்யுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கை வருமாறு,

வன்னிக்கான ஆசிரியர்களின் இடமாற்றங்கள் அனைத்தையும் இடைநிறுத்தி, இடமாற்ற சபையைக் கூட்டி ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளை அழைத்து உடனடியாக மீள் பரிசீலனை செய்யுமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி மாகாண அமைச்சுச் செயலாளருக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் பணித்துள்ளார்.

அண்மையில் வடமாகாணக் கல்வித் திணைக்களம் இடமாற்ற சபையைக் கூட்டாது ஐந்நூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை அவர்களின் விண்ணப்பமோ, விருப்பமோ இன்றி கட்டாய இடமாற்றக் கட்டளைகளைப் பிறப்பித்தது. இவ்விடமாற்றங்களில் பின்வரும் குறைபாடுகள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டன. அவையாவன,

- ❖ சேவை நியமன நிபந்தனைகளுக்கு முற்றிலும் முரணாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ ஏற்கனவே கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றியவர்கள் இடமாற்றப்பட்டுள்ளார்கள்.
- ❖ வெளிமாவட்ட சேவையுடையோர் இடமாற்றப்பட்டுள்ளார்கள்.
- ❖ குடும்பம் பிரிக்கப்பட்டு கணவன் அல்லது மனைவிக்கு வன்னிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.
- ❖ கர்ப்பிணித்தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் இடமாற்றப்பட்டுள்ளனர்.
- ❖ இருதய நோயாளர்களும், இரத்த அழுத்த நோயாளர்களும் இடமாற்றப்பட்டுள்ளார்கள்.
- ❖ இடமாற்றத்திற்கான காரணம் குறிக்கப்படவில்லை.
- ❖ தேசிய பாடசாலை ஆசிரியர்கள் மாகாண பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள்.
- ❖ மூன்றாம் தவணை ஆரம்பத்தில் இவ்விடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமையால் விசேடமாக க.பொ.த.(சா/தர) வகுப்பு மாணவர்களின் பாடசாலைக் கல்வி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்களை ஆழமாகப் பரிசீலித்த ஆளுநர் இடமாற்றத்தை உடனடியாக இடைநிறுத்தி இடமாற்ற சபையைக் கூட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினை அழைத்து மீள்பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

இவ்விடமாற்றத்தை விரும்பாத சகல சங்கத்தின் அங்கத்தவரையும் உடனடியாக தமதுமேன்முறையீடுகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட செயலாளருக்கூடாக அனுப்பிவைக்குமாறு சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் கூறினார். (சு)


### தவறிவிட்டது

கைதடி, நாவற்குழி தெற்கு கோயிலாக்கண்டி துறை நாவற்குழி எனும் விலாசத்தையுடைய தவராஜா அருந்ததி என்பவரது தேசிய அடை யாள அட்டை (808542951V) சாவகச்சேரி சிவன்கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்

தொடர்புக்கு:-
T.P:- 0779581368 (224)



### முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகைதந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

ஸ்ரீராம சாஸ்திரி
0775183681, 0775183109

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கண வன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ் திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் [illegible] ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்

K.R.V.INN,
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் முன்பாக)

கைரேகை பார்க்கும் நேரம்: காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்

(2245)

### வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான பிடவை நிறுவனத்துக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும்:- சிட்டை எழுதுனரும் தேவை (ஆண்) வயது (40-55)

உடன் தொடர்புக்கு:- 2229286

(2248)

### மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

20.08.2010 முதல் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாத விடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை , வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு. இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன் றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஸூரிஸ் இன்
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(C-930)



# இன்று ஒரு தகவல்

## நன்மையும் தீமையும்

ஒருத்தர் நமக்கு நன்மை செய்கிறார் என்று வைத் துக் கொள்ளுங்கள் அதை நாம் நீண்ட நாள் நினைத் துக் கொண்டே இருப்பதில்லை .

ஆனால் அவரே நமக்கு தீமை செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்

இதை அவ்வளவு சுலபமாக மறந்து விடமாட்டோம். என்றைக்குப் பழிவாங்கலாம் என்று கதைத்துக் கொண் டிருப்போம்.

சுவாமி சிவானந்தர் ஒரு கதை சொல்லி இதை விளங்க வைக்கிறார்.

ஒரு கிராமத்தில் ஒரு ஆள் இருந்தான் விவசாயம் தான் தொழில் அவனுக்கு ஒரு மகன் இருந்தான். ஒரே பிள்ளை என்பதால் ரொம்ப பிரியம்.

ஒரு நாள் அந்தப் பிள்ளையை ஒரு பாம்பு கடித்து விட்டது. அவன் இறந்துவிட்டான்.மகனை இழந்து விட்டோம் என்று தெரிந்தும் அவனுக்கு அந்தப்பாம்பின் மீது பங்கர கோபம்.

உடனே ஒரு கோடாரியை கையில் எடுத்துக் கொண் டான்.

அந்தப்பாம்பை தேடிப்பிடித்து அதன் மேல் ஓங்கி ஒரு போடு போட்டான்.

அவ்வளவுதான் அந்தப் பாம்பின் வால் துண்டாகி விட்டது.

வால் மட்டும் அப்படியே துண்டாகிக் கிடக்க பாம்பு ஓடி விட்டது.அதன்பின் ஒரு பயம் உண்டாகி விட்டது.

அப்படிப்பட்ட பாம்பு நம்மை பழிவாங்காமல் விடுமா என்ற பயம்.

சிறிது காலம் ஆகிவிட்டது. இப்படி பயந்து கொண்டே எத்தனை நாள் தான் இருப்பது?

அந்தப் பாம்புடன் பேசி சமாதானம் பண்ணிக் கொள் ளலாம் என்று முடிவு செய்தான்.

உடனே ஒரு கோப்பையில் பால் எடுத்துக் கொண்டு போனான் பாம்புப்புற்றுக்குப் பக்கத்தில் வைத்தான். பாம்பு வெளியில் வந்நது.

இவன் விபரத்தைச் சொன்னான். அப்பொழுது அந் தப் பாம்பு சொல்லியதாம்:

''இதோபார்... இனிமேல் நாம் நண்பர்களா இருப்ப தென்பது முடியாத காரியம்.

நான் உன்னைப் பார்க்கும் போதொல்லாம் அல்லது உன்னை நினைக்கும் போதெல்லாம் எனக்கு என் னுடைய அறுபட்ட வால்தான் ஞாபகத்துக்கு வரும் அது போல் நீ என்னைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் இறந்து போன உன்னுடைய மகனின் நினைப்புத்த தான் உனக்கு வரும்.

ஒருவர் நமக்கு செய்யும் தீங்கு நம்மனதில் ஆழ மாக பதிந்து விடுகிறது. பழிவாங்கும் சுபாவம் தலை தூக்கி நிற்கின்றது'' இப்படிச் சொல்லி விட்டு இந்தப் பாம்பு, புற்றக்குள் போய்விட்டதாம்.

பொதுவான உலக இயல்பு இது மற்றவர்கள் நமக்கு செய்த நல்லவைகளையெல்லாம் நாம் சுலபமாக மறந்து விடுகின்றோம்.

ஆனால் அவர்கள் செய்த தீமைகள் நம் மனதில் ஆழ மாக பதிந்து போய் விடுகிறது. அதுமட்டுமல்ல, பழி வாங்குவதற்கான தருணத்தை எதிர்பார்த்து மனம் காத்துக் கொண்டிருக்கின்றது.

இதனால் என்ன ஆகும்?

மனதில் அமைதியில்லை எப்பொழுதும் பயந்து பயந்து வாழ்கின்றோம்.

அதனால் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அமைதியும் வேண்டுமென்று நினைப்பவர்கள் அடுத்ததவர்கள் செய்த தீமைகளை மறந்துவிட வேண்டும். நன்மை களை மறந்து விடவே கூடாது. எப்பொழுதும் ஞாபகத் தில் வைத்திருக்க வேண்டும். நம்மவர்கள் சிலபேர் பழி வாங்கும் விதமே தனி. ஒருத்தன் இன்னொருத் தனைப் போட்டு அடித்துக் கொண்டிருந்தான்.

அந்தவழியாக வந்த ஒருத்தர் “ஏன்டா அவனைப் போட்டு இப்படி அடிக்கிறாய்?''என்றார்.

''இவனைப் பழி வாங்கிக் கொண்டிருக்கின்றேன். என்றான் அவன்.

“எதற்காகப் பழி வாங்குகிறாய்?'' என்றார். “இவன் என் முகத்தைப் பார்த்து தேவாங்கு என்று திட்டி விட் டான்'' சேர் என்றார்.

“எப்பொழுது திட்டினார்?'' என்று கேட்டார் அவர் ''ஆறு மாதத்துக்கு முன்'' என்றான். “அதற்கு ஏன் இப்படி அடிக்கிறாய்?'' என்றார். “நான் இன்றைக்குத் தான் சேர் தேவாங்கை நேரில் பார்த்தேன்'' என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

வடமாகாண கல்வி திணைக் களத்தினால் வழங்கப்பட்ட மாவட்டங் களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வலய ரீதியாக மீள் பரிசீலனை செய்த பின்னரே இவ் இடமாற் றத்தை அமுல்படுத்துமாறு வட மாகாண ஆளுநர் மேஜர் ஜென ரல் ஜீ.ஏ.சந்திரசிறி பணிப்புரை வழங்கியதையடுத்தே இந் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், ஆளுநரின் செய லாளர் எஸ்.ரங்கராஜா, பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) இ.மனோ ரஞ்சிதன், திட்டமிடல் செயலாளர் எல்.உமாகாந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பா ளர்கள் ஆகியோர் கலந்துகொண் டனர். (6-2)

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்குமாறு இலங்கை வர்த்தக சமூகம் கோரிக்கை

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை வழங்குமாறு இலங்கையின் வர்த்தக சமூ கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் அமைந்துள்ள வர்த்தக சபைகள் அனைத்தும் இணைந்து பிரசல்ஸ் நகரில் அமைந்துள்ள ஆணைக்குழுவின் தலைமையகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்ப இருப்பதாக ஒன்றிணைந்த வர்த்தக சபையின் தலைவர் லால்டி அல்டிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய வர்த்தக சபை இது தொடர்பாக வேண்டுகோள் ஒன்றை விடுக் கவுள்ளதாகவும் இலங்கையின் தற்போதைய பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தி ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை மீண்டும் வழங்குமாறு ஐரோப்பியஒன்றியத்திடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் லால்டி அல்டிஸ் கூறினார். (6)

## இராசி பலன்

24.08.2010
(ஆவணி 8,செவ்வாய்க்கிழமை)
பூரணை முன்னிரவு 10.44 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.04 மணிவரை
இராகுகாலம்-3.05-4.35 மணிவரை
சுபநேரம்-10.35-12.05 மணிவரை
பூரணை விரதம்

**மேடம்** ஆலய வழிபாட்டால் சிறப் பினைக் காண வேண்டிய நாள்,பணம் பல வழிகளிலும் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், குடும் பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**இடபம்** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்,நட்பு வட்டம் விரிவடை யும், வழிபாட்டில் ஆர்வம் அதிகரிக் கும், புதிய ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டு மகிழும் நாள்.

**மிதுனம்** கோயில் வழிபாட்டால் குதூ கலம் காணவேண்டிய நாள்,கலகலப் பாகப் பேசி காரியங்களைச் சாதித் துக் கொள்வீர்கள், பகைவர்களும் நண் பர்களாக மாறுவர், உடல் நலம் சீராகும்.

**கடகம்** காரிய வெற்றிக்கு கடவுளை வணங்க வேண்டியநாள், வாழ்க்கைத் தேவை களைப் பூர்த்தி செய்வதில் சில தடு மாற்றம் ஏற்படலாம், பொறுப்புக் களைப் பொறுப்பேற்பது நல்லதல்ல.

**சிங்கம்** வழிபாட்டின் மூலம் வளர்ச்சி காண வேண்டிய நாள்,வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும், நீண்டநாளைய ஆசையொன்று நிறை வேறும்.

**கன்னி** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்,வீடு தேடி வரும் விருந் தினர்களை உபசரித்து மகிழ்வீர்கள், வியாபார,தொழில் ரீதியில் பங்காள ரின் ஒத்துழைப்பு கிட்டும்.

**துலாம்** சொன்ன சொல்லைக் காப் பாற்றி மகிழ்வீர்கள்,வெளியூர் பய ணங்கள் வெற்றிகரமாக அமையும், பேச்சில் கனிவு பிறக்கும், கல்யாணக் கனவு நனவாகலாம்.

**விருச்சிகம்** வழிபாட்டில் பெருமை காண வேண்டிய நாள்,அஞ்சல் வழியில் அனுகூலச் செய்தி வந்து சேரும், பணப் புழக்கம் அதிகரிக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** மனதில் இருந்த பாசம் குறை யும், இழுபறியாக இருந்த பிரச் சினை முடிவுக்கு வரும், உறவினர் களின் வருகை மூலம் இன்பம் காண வேண்டிய நாள்.

**மகரம்** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண் டிய நாள், ஊக்கத்தோடும் உற்சாகத் தோடும் பணி புரிவீர்கள், உறவினர் வரு கையால் சந்தோசம் அதிகரிக்கும்.

**கும்பம்** பசுமையான எண்ணங்கள் மன தில் தோன்றிக் கொண்டேயிருக்கும், உடல் நலம் சீராக சிறுதொகையை செலவு செய்யவேண்டிவரலாம், கடவுளை வழி பட்டு சுகம் காணவேண்டிய நாள்.

**மீனம்** கோரிக்கைகள் நிறைவேற கோவி லுக்குச் செல்ல வேண்டிய நாள், வெளி யுலகத் தொடர்பு விரிவடையும், பலர் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் வாய்ப்பு உருவாகும்.

வளவன்

## 4 ஆவது ஆயுள்வேத மாநாடும் ஆரோக்கியா எஸ்போவும்

இந்திய விஞ்ஞான பாரதி மற்றும் ஆயுஸ் திணைக்களம் (Dept. of.Ayush) இணைந்து அனைவருக்கும் *ஆயுள்வேதம் எனும் தொனிப் பொருளில்*நடத்தும் *4 ஆவது ஆயுள்வேத மாநாடும் ஆரோக்கியா எஸ் போவும்* எதிர்வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது என மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரை ரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலதிக விபரங்களை www.ayurworld.org எனும் இணையத் தளமுகவரியில் பார்வையிடலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6-4)

## கிளிநொச்சியில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு உலகவங்கியினால் வீடுகள் நிர்மாணம்

உலக வங்கி கிளிநொச்சியில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளது. இதன் அடிப்படை யின் கீழ் 780 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதன் போது அமைக்கப்படும் வீடுகள் ஒவ்வொன்றும் மூன்று இலட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியை கொண்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


ஏற்கனவே இந்திய அரசாங்கம் உறுதியளித்துள்ள 50 ஆயி ரம் வீடுகளில் 12 ஆயிரத்து 500 வீடுகள் கிளிநொச்சியில் அமைக் கப்படவுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் கிளிநொச்சி மாவட்ட மக் களுக்காக 600 வீடுகளை நிர்மாணித்து வழங்க முன்வந்துள் ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வேலைத்திட்டத்தின் கீழும் 300 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. (6-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 80 |
| தக்காளி | 90 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 |
| கோவா | 80 | 40 |
| கரட் | 100 | 100 |
| பூசணி | 50 | 40 |
| புடோல் | 50 | 30 |
| வாழைக்காய் | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 90 | 50 |
| பயற்றங்காய் | 140 | 100 |
| லீக்ஸ் | 140 | 110 |
| பீற்றூட் | 80 | 40 |
| கறிமிளகாய் | 90 | 70 |
| முருங்கைக்காய் | 140 | 80 |
| போஞ்சி | 120 | 110 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 25 | 15 |
| தேசிக்காய் | 120 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-35 |

கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் துறைசார் முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் நேற்று வவுனியா கல்வித் திணைக்கள கேட்போர்கூடத்தில் கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும் இதில் கலந்துகொண்ட ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா, பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) இ.மனோரஞ்சிதன், திட்டமிடச் செயலாளர் எல்.உமாகாந்தன் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆசிரிய வள நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற " English as a Life Skill" பத்து நாள் செயலமர்வில் பங்குபற்றிய சகல ஆசிரியர்களுக்குமான இரு நாள் செயலமர்வு எதிர்வரும் 26ஆம்திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்குறித்த ஆரம்ப செயலமர்வில் பங்குகொண்ட அனைத்து ஆசிரியர்களும் இச் செயலமர்வில் பங்குகொள்ள வேண்டும் என யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (2-4)

## டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்குகள்

(பூநகரி)

பூநகரிப்பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் கிராம ரீதியாக நடைபெற்று வருகின்றது.

இதற்கமைவாக கடந்த 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஜெயபுர பிரதேசத்திலும் நாச்சிக்குடாப் பிரதேசத்திலும் டெங்கு நோய் விழிப்புணர்வு விசேட ஆணையாளர் க. தனபாலசிங்கம் தலைமையில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுசுகாதாப் பரிசோதகர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதன் அடுத்த கட்ட க்ருத்தரங்கு கடந்த 18 ஆம் திகதி முழங்காவில், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு மற்றும் கிராஞ்சி ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. இதன்போது சிரமதானப் பணிகளும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இராணுவத்தினர் , வர்த்தக சங்கத்தினர் , பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு நடாத்தினர். (6-2)

# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை யொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் மஞ்சத்திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை எஸ்.குமாரசாமி (பாட்டு), ஏ.ஜெயராமன் (வயலின்), எஸ்.துரைராசா (மிருதங்கம்), சதாவேல்மாறன் (தபேலா), கே.நந்தகுமார் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்று வரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை "ஆறுமுகம் ஆனபொருள்' என்னும் விடயம் பற்றி மதுரகவி காரை எம்.பி.அருளாணந்தன் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து திருமதி புஸ்பமலர் யோகநாதனின் நெறிப்படுத்தலில் இசைக் கச்சேரியும் வடலியடைப்பு இந்து இளைஞர் சங்கம் ஊர்காவற்துறை தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (6)

✠✠✠

நல்லூர் சைவமகாசபையினால் நல்லூர் கந்தன் ஆலயப் பெருவிழாவை முன்னிட்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்று வரும் வில்லிபாரதம் தெய்வீக தொடர் இசைப் பேருரையில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30மணிக்கு 'பாரதவம்சம்' என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா தொடர் இசைப்பேருரை நிகழ்த்தவுள்ளார். (6-4)




## தகவல் தொழில்நுட்பம் (GIT) அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யா/மகாஜனாக் கல்லூரியில் தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பம் (GIT) அனுமதி அட்டை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

உரிய மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் திருமதி எஸ்.அனந்தசயனன் அறிவித்துள்ளார். (6-4)

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் இந்துவை எதிர்த்து உடுவில் சிந்து அணியும் நாவற்குழி சரஸ்வதி அணியை எதிர்த்து மயிலிட்டி ஒற்றுமை அணியும் மோதவுள்ளனர்.

இதேவேளை நாளை புதன்கிழமை நடைபெறும் போட்டியில் 3 மணிக்கு கைதடி குமரகுரு அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரியம்பாள் அணி மோதவுள்ளது இப்போட்டியில் உடுவில் ஆலடி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (6-4)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணியும் மற்றுமொரு போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளன. (6-4-24)

# ஆடிப் பண்படுத்தலுக்காக மழையை எதிர்பார்த்த விவசாயிகள் ஆறுதல்

(மாதகல்)

மாதகல் மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் நீண்டகால வறட்சிக்கு பின் நல்ல மழை பெய்துள்ளமையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதனால் வயல் நிலங்களுக்கு மிதமான மழை நீர் கிடைத்துள்ளதாகவும் இதில் மாதகல் மற்றும் சதாயபுரம் மாரீசன்கூடல், சில்லாலை, பண்டத்தரிப்பு போன்ற பிரதேசங்களில் ஆடி பண்படுத்தலுக்கான காத்திருந்த விவசாயிகள் இம் மழையினால் ஆறுதல் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4-40)

# மழை காரணமாக இடைத்தங்கல் முகாம் மக்கள் பெரும் அசௌகரியம்

## விரைவில் மீள்குடியேற்றக் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் தற்போது பெய்து வருகின்ற மழை காரணமாக வடமராட்சி கிழக்கு இடைத்தங்கள் முகாமில் வாழ்கின்ற மக்கள் பெரும் சிரமங்களை மேற்கொண்டு வருகின்றனர். மழை வெள்ளநீர் வீடுகளுக்குள்ளே வருவதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை கொடிகாமம் இராமாவில் இடைத்தங்கல் முகாமில் வாழ்கின்ற மக்களும் மழை காரணமாக பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருவதாகவும் மழை வெள்ளநீர் கொட்டகைக்குள் கசிவதால் உணவுகளை சமைப்பதில் தாங்கள் பெரும் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே விரைவாக தங்களை தங்களது பகுதிகளுக்கு மீள் குடியேற்றுவதன் ஊடாக மழையின் போது ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து தாம் விடுபட முடியும் எனவும் தமது விரைவான மீள் குடியேற்றத்தின் அவசியம் குறித்து பல தரப்பினரிடமும் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் இது தொடர்பில் ஏற்கனவே யாழ். அரச அதிபர், வடமராட்சி கிழக்கு கூட்டுறவு சங்க சமாசம், வடமராட்சி இடம்பெயர்ந்தோர் அபிவிருத்தி அமைப்பு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பிகட்சியினர் உட்பட பல தரப்பினரும் அரச உயர் மட்டங்களிடம் கோரிக்கைகள் விடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (6-43)

# வடமராட்சிப் பகுதிகளில் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் பெய்த மழையை அடுத்து நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக தும்பளை கிழக்கு, கற்கோவளம், நெல்லண்டை ஆகிய பகுதிகளிலேயே நுளம்பின் பெருக்கம் அதிகம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நுளம்புகளை கட்டுப்படுத்தத் தவறினால் இப்பகுதி மக்களிடையே மலேரியாவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக சுகாதார பகுதியினர் ஐயம் வெளியிட்டுள்ளனர். மேலும் இப்பகுதிகளில் நீண்டகாலமாக மலத்தியோன் விசிறப்படாமை காரணமாகவே நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் மலத்தியோன் விசிறும் நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் விரைவாக மேற்கொள்ள வேண்டும் எனவும் இம் மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-43)



சொண்ட் நிறுவனத்தினால் சாவகச்சேரி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 38 பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்லஸ் தேவானந்தா மற்றும் சொண்ட் நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் ச.செந்துராசா ஆகியோர் உரையாற்றுவதையும் சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.வாசன் வாழ்வாதார உதவியை பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும் வாழ்வாதார உதவித்திட்டத்தில் கலந்து கொண்ட பயனாளிகளில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# வடக்குக் கிழக்கிலுள்ள விதவைகளுக்கு மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலுள்ள 89 ஆயிரம் விதவைகளுக்காக விசேட மீள் எழுச்சி திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டத்திற்கென 250 மில்லியன் ரூபாய் நிதியை நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளதாக சிறுவர் மேம்பாட்டு மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப் பட்டதுடன் இரு நாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்பட இருக்கின்ற இந்த மீள் எழுச்சி திட்டத்தின் முதற்கட்ட செயற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்டத்தை மையமாக்க கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு கிழக்கில் மொத்தமாக 89 அயிரம் விதவைகள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 49ஆயிரம் விதவைகள் கிழக்கு மாகாணத்தில் உள்ளனர். 40 ஆயிரம் விதவைகள் வடமாகாணத்திலும் உள்ளனர்.

இவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 25ஆயிரம் விதவைகள் இருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் இதனை மையமாகக் கொண்டே முதற்கட்ட செயற்பாடுகளை மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படவுள்ள விதவைகளுக்கு தையல், விவசாயம், கணனி போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன் சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சித் திட்டத்தின் கீழ் ஆடு, மாடு, விவசாய உபகரணங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் உட்பட தேவையான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது என்றார்.

இந்த மீள் எழுச்சித் திட்டத்தை மேலும் விஸ்தரித்து சிறந்த முறையில் நடை முறைப்படுத்தும் வகையில் ஆராயும் பொருட்டு அடுத்த மாதம் தான் புதுடில்லி பயணமாகவுள்ளதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார். (6-2)

## இலங்கைப் பணிப்பெண்களை ஜோர்தான் அனுப்புவது நிறுத்தம்

ஜோர்தானுக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்பும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

ஜோர்தானில் இலங்கைப் பணிப்பெண்களுக்குக் குறைந்தளவு சம்பளமே வழங்கப்படுவதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

எதிர்காலத்தில் குறைந்த பட்ச சம்பளமாக 200 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டால் மாத்திரமே ஜோர்தானுக்குப் பணிப்பெண்களை அனுப்புவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் .

வீட்டுப்பணிப்பெண்களின் சம்பளத்தை 200 அமெரிக்க டொலர்களாக நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜோர்தான் முகவர் நிலையங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் இதுவரை அந்த முயற்சி வெற்றியளிக்க வில்லை யெனப் பணியகத் தலைவர் தெரிவித்தார். இதனை அடுத்து ஜோர்தானுக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதை தற்காலிக மாக இடைநிறுத்துவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தீர்மானித்துள்ளது. (6-2)


# தனை நாடிவரும் பக்தர்களின் குறைதீர்க்கும் ஸ்ரீரங்கநாதப்பெருமான்

ஈழ மணித்திருநாட்டின் வடபால் தொல் பெருமைக்குரிய பல்லோர் புகழும் வல்லிபுர ஆழ்வார் கோயில்,பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்,வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் போன்று வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவிலும் பெருமை பெற்று விளங்குகின்றது. இவ்வாலயமானது மூர்த்தி,தலம், தீர்த்தம், தல விருட்சம் ஆகிய சிறப்புக்கள் ஒருங்கே அமையப் பெற்றது.

வரலாற்றுச் சிறப்பும் ,வழிபாட்டுச் சிறப்பும் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வாலயத்தில் மகா விஷ்ணு அரங்கநாதர் என்ற நாமம் தாங்கியும் மகாலட்சுமி அரங்கநாயகி என்ற நாமம் பூண்டும் சிறிதேவி-பூமிதேவி சமேதராக நின்ற கோலத்திலும் அதேவேளை சயனக்கோலத்திலும் எம்பெருமான் அருள்பாலித்த வண்ணமுள்ளார். இவ்வாலயம் கருங்கல்லினால் சிற்ப வேலைகள் அமைக்கப்பட்ட கருவறையோடு கூடிய மூன்றுதள விமானத்துடன் ஆலயம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. வட்டக்கச்சிப்பிரதேசம் கிட்டத்தட்ட 1955ஆம் ஆண் டளவில் குடியேற்றம் செய்யப்பட்டது.

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள படித்த இளைஞர், யுவதிகள் இங்கு வந்து குடியேறினர். ***கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்*** என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க இளைஞர்களும் தற்சமயம் ஆலயம் இருக்குமிடத்தில் சிறுகுடிலமைத்து அரங்கநாதனின் கண்ணாடிப் படத்தை வைத்து வழிபாடியற்றினர். இதன் பின்னர் சிறு கற்கோயில் அமைத்து 1981ஆம் வருடம் முதலாவது கும்பாபிஷேகம் சிறப்புற இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து நித்திய, நைமித்திய பூசைகள், வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. ஒவ்வொரு ஞாயிறு தோறும் விசேட வழிபாடுகள், நாம சங்கீர்த்தனங்கள் இடம் பெற்றதோடு பத்தி மயமான விழாக்களும் நிகழ்த்தப்பட்டன. இவ்விதமான செயற்பாடுகளினால் எம்பெருமான் தன்னை நாடி வரும் பத்தர்களின் குறை தீர்க்கும் வள்ளலாகவும் கருணாமூர்த்தியாகவும் திகழ்கின்றார். இதன் காரணமாக பக்தர்களின் மனங்களில் ஊற்றெடுத்த போரின் பின் வெளிப்பாடகவும் எம்பெருமான் பத்தர்களின் எண்ணங்களை நிறைவேற்றவேணுமென்ற பெருங் கருணையினாலும் அரங்கனுக்கு சுந்தரக் கோவிலமைத்து 2002ஆம் ஆண்டு சிறப்பான கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிருந்து இன்று வரை பல திருப்பணிகள் நிறைவேறியுள்ளன. யுத்தம் காரணமாக மக்கள் இடம் பெயர நேரிட்டது இக் காலத்தில் மக்கள் அவரை வழிபடமுடியாமலும் பூசைகளை நிறைவேற்ற முடியாமலும் தடைப்பட்டிருந்தது. இவ்வாறு வாழ்ந்த காலத்திலும் மக்கள் முழுநம்பிக்கையுடன் அவரது நாமத்தையும் பகவத்கீதையையும் உச்சரிக்க மறந்தார்களில்லை. எம்பெருமானை முழுநம்பிக்கையுடன் பணிந்தவர்கள் தோல்வியுறவில்லை. இவ்வாலயத்தின் வரலாற்றுச் சிறப்பை நாம் உற்று நோக்கினால் இக்குடியேற்ற காலத்தின் முன்பு தற்சமயம் தீர்த்தமாக இருக்கின்ற குளத்து நீர் பருக காட்டு மிருகங்கள் வருவது வழக்கம். அம்மிருகங்களை வேட்டையாடுவதற்கு அயல் கிராமங்களில் இருந்து வேட்டைக்காரர் வருவதும் வழக்கம். அவர்கள பெரும்பாலும் காட்டு வழியாக வரும் பொழுது பாதையை மாறி காட்டில் அலைந்து திரிவார்களாம் அப்படியான வேளையில் ஒரு தலை நரைத்த கிழவர் தாடியுடன் காடுமாறியவர் முன்னே நடந்து செல்வாராம். அவரைப் பின் தொடர்ந்தால் குளத்தை வந்தடையலாமாம். குளத்தை வந்து அடைந்தவர்கள் தங்கள் இருப்பிடம் செல்ல வசதியாக இருக்குமாம். அதன்பின் அக்கிழவர் மறைத்து விடுவாராம். இதே போன்று இப்பகுதியில் ஒரு அழகிய வெள்ளைப் பசுமாடு புல் மேய்ந்து கொண்டிருக்குமாம். அதன் அருகே சென்றால் அது ஓடிச் சென்று பழைய ஆலயம் இருந்த பகுதிக்குச் சென்று மறைந்து விடுமாம். இப்படியான கதைகளைக் கேள்வியுற்ற மக்கள் இவ்வாலயத்தில் கிருஸ்ணபகவானைப் பிரதிஸ்டை செய்து வழிபடுவதுதான் சிறந்தது என்று முடிவெடுத்தது. இறைவாக்கே அல்லாது பிறிதொன்றில்லை. இவ்வாறாக பழமையும் புதுமையும் ஒன்று சேர எம்பெருமானுடைய பெருங்கருணை மக்கள் மத்தியில் பரவிக் கிடக்கின்றது .

## வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீரங்கநாதப்பெருமாள் ஆலய கொடியேற்றம் இன்றாகும்



இவ்வாலயத்தில் ஞாயிறு தோறும் சிறப்பு வழிபாடும் பூசைகளும் பஜ னையும் அன்னதானமும் நடைபெறுகிறது. வரலட்சுமி நோன்பு பூசைகளும் வருடா வருடம் சிறப்பாக நடைபெறுகிறது. ஆவணி யில் கிருஸ்ண ஜெயந்தியைத் தேராகக் கொண்ட மஹோற்சவமும் திருப்பாவை விழா வும் சிறப்பாக நடைபெறுகிறது. இவ்விழாக் கள் சிறப்புற நடைபெற திருஅருட்கடாட்சம் கிடைத்திருக்கிறது.

மு.தியாகராஜா
வட்டக்கச்சி

## விடுதலைப்புலிகளுடன் எனக்குத் தொடர்பா? மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ.மகேந்திரன் மறுப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் எனக்கு தொடர்பிருந்தது என்று குமரன் பத்மநாதன் கூறுவது உண்மையில்லை என்று மார்க்சிஸ்ட் எம்.எல். ஏ. மகேந்திரன் மறுத்துள்ளார்.

இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. மகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் குமரன் பத்மநாதன் இலங்கையில் பத்திரிகைக்கு ஒன்றுக்கு பேட்டியளிக்கையில்,

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுச் செயலாளர் நடேசன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரனிடம் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கு இடையில் போர் நிறுத்தம் கொண்டு வரும் ஆலோசனை சொன்னதாகவும் இத்தகவலை மகேந்திரன் ம.தி.மு.க. தலைவரிடம் கூறியதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தச் செய்தியை நான் முழுமையாக மறுக்கிறேன். நான் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறேன். எனக்கோ, என்னுடைய கட்சிக்கோ விடுதலைப்புலிகளுடனோ மேற்கூறிய நடேசனுடனோ எந்தச் காலத்திலும் எந்தவித தொடர்பும் இருந்ததில்லை.

இலங்கைத் தமிழர்கள் துயரத்திற்கு ஆளான போது இப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் அரசியல் ரீதியான சுமூகத் தீர்வுகாண வேண்டும் என்ற நிலையைத் தான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தினோம். மேலும் இலங்கைத் தமிழர்களுக்கு மாநில சுயாட்சி அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் எங்கள் கட்சி வலியுறுத்தியது. இப்போதும் எங்கள் கட்சி அதையே வலியுறுத்துகிறது.

விடுதலைப்புலிகளின் அணுகுமுறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எப்போதுமே ஏற்புடையதல்ல. எனவே போர் நிறுத்தம் குறித்து என்னிடம் நடேசன் பேசியதாக குமரன் பத்மநாதன் அளித்துள்ள பேட்டியில் கூறப்படுவது உண்மையானது அல்ல என்பதை தெளிவு படுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார். (6-2)

## புனர்வாழ்வளிக்கப்பட்ட 30 பேர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

புனர்வாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் 30 பேரை எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவர்களது குடும்பத்தாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக புனர்வாழ்வு நிலையங்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

இம்முறை ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளையுடைய தாய்மார் மற்றும் சுகயீனமுற்ற 30 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக ஆணையாளர் கூறினார்.

மோதல்களின் போது புலி உறுப்பினர்களுடன் தொடர்புடையவர்கள் சரணடையுமாறு இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதற்கமைய சரணடைந்த பல்வேறு வயதிற்குட்பட்டவர்கள் வெவ்வேறு புனர் வாழ்வு நிலையங்களின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கான விசாரணைகள் முடிவடைந்த பின்னர் வயதெல்லை அடிப்படையில் இவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில் புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து இதுவரையில் 3ஆயிரத்து 80 முன்னாள் புலி உறுப்பினர்கள் தமக்குரிய விசாரணைகள் முடிவடைந்ததையடுத்து பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளுடைய தாய்மார் மற்றும் கடும் சுகயீனமுற்ற 30 பேரே அடுத்த கட்டமாக விடுவிக்கப்படவிருப்பதாகவும் ஆணையாளர் கூறினார்.

இதேவேளை புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து சட்டபூர்வமாக திருமணம் செய்து வைக்கப்பட்ட 59 குடும்பத்தாருக்கு அன்றைய தினம் சுய தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தோட்டப்பயிர்ச் செய்கைக்கான உபகரணங்கள், மரக்கன்றுகள் மற்றும் களை நாசினிகள் ஆகியனவும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடு களை புனர்வாழ்வு அமைச்சுடன் இணைந்து விவசாய அமைச்சு முன்னெடுத்து வருகிறது. (6-2)

## புற்றுநோயை குணமாக்கும் புதிய புரோட்டீன்கள் கண்டுபிடிப்பு

(டொராண்டோ)

புற்றுநோயை குணமாக்கும் புதிய புரோட்டீன்களை கனடாவைச் சேர்ந்த பல்கலை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மனித உடலில் உள்ள செல்களின் டி.என்.ஏ. வினை பாதிப்படைய செய்யும் புற்றுநோய் கிருமியை மேலும் பரவாமல் தடுக்கும் புதிய புரோட்டின்களான ஓ.டி.யூ.பி.-1 மற்றும் பி.ஆர்.சி.ஏ. 1 எனும் புதிய புரோட்டீன்களை கனடாவின் ரொறண்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களான டேனியல் டிரெளச்சர் ஆனாகிளொட் மற்றும ஜிங்கிராஸ் பிராங் ஆகியோர் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தகைய புரோட்டீன்கள் மரபு வழி யாக பெண்களுக்கு தோன்றும் மார்பபக புற்று, நோய் கர்ப்பப்பைபுற்றுநோய்போன்றவற்றினை மேலும் பரவாமல் தடுத்து நிறுத்தம் என்றும் ஆராய்ச்சியில் கூறப்பட்டுள்ளது. (6-2)

## போதிய வசதிகளின்மையால் சிரமத்துக்குள்ளாகும் சுற்றுலாப் பயணிகள்

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேசத்திலுள்ள கௌதாரிமுனை, கல்முனை ஆகிய இடங்களுக்கு தென்னிலங்கையில் இருந்து பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக குறிப்பிடப்படுகிறது.

குறிப்பிட்ட இடங்கள் இயற்கை அழகு கொண்டதாலும் மண்மலைகள் காணப்படுவதாலும் இவற்றைப் பார்வையிடுவதற்காகவே சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக குறிப்பிடப்படுகிறது.

எனினும் இங்கு வருன்க தரும் உல்லாசப் பயணிகள் மண்ணித்தலைப்பக்கமாக 2 மண்டபங்கள் மட்டுமே கட்டப்பட்டுள்ளதாகவும் அவ்விடம் தற்காலத்தில் போதமையாக உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் சிற்றுண்டிச் சாலை மற்றும் சிறு வியாபாரக் கடைகள் ஆகிய எதுவுமில்லாமையினால் உணவு மற்றும் பொருட்களை பெற்றுக் கொள்ள முடி யாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே மக்களுடைய தேவைகளை கருத்திற்கொண்டு பல நோ.கூட்டுறவு சங்கமோ அல்லது ஏனைய நிறுவனங்களோ இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.(6-4-2)

## பொன்சேகாவுக்கு எதிராக சாட்சியமளித்தமை தொடர்பில் லக்ஷ்மன் செனவிரட்னவிடம் விசாரணை

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவிற்கு எதிராக சாட்சியமளித்தமை குறித்து ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரட்னவிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க விசாரணை நடத்தியுள்ளார்.

என்ன காரணத்திற்காக சரத் பொன்சேகாவிற்கு எதிராக சாட்சியமளித்தீர்கள் என எதிர்க்கட்சித் தலைவர் லக்ஸ்மன் செனவிரட்னவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொன்சேகா இராணுவச் சீருடையில் இருந்த போது அரசியலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து முதலாம் இராணுவ நீதிமன்றினால் நடத்தப்பட்ட விசாரணைகளில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரட்னவும் சாட்சியமளித்தனர்.

வேறு வழியின்றி தாம் இராணுவ நீதிமன்றில் சாட்சியமளித்ததாக லக்ஸ்மன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை சரத் பொன்சேகாவிற்கு விதிக்கப்பட்ட தண்டனை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் இதற்கு எதிராக போராட்டம் நடத்தப் படவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(6-2)

# 'ஜெயலிதாவின் பூச்சாண்டிக்கு.....

தி.மு.க.காங்கிரஸ்கட்சிகள் இடையிலான கூட்டணி உறுதியாக இருக்கிறது. டில்லியில் காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர்களை சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறேன். எங்களுக்குள் எந்தப்பிரச்சினையும் இல்லை. வரும் சட்டமன்றத் தேர்தலிலும் எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும்

**கேள்வி:- புதிய தமிழகம் ம.ம.க. என்று புதிய கட்சிகளை தங்கள் கூட்டணிக்குள் கொண்டு வருகிறது. அ.தி.மு.க.உங்கள் கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருமா?**

எங்களின் தற்போதைய கூட்டணியே மிக வலுவான கூட்டணியாகத்தான் இருக்கிறது. வலு இல்லாதவர்கள் தான் அவசரப்படவேண்டும். தேர்தலுக்கு இன்னும் நிறைய நாட்கள் இருக்கின்றன. புதிய கட்சிகள் எங்கள் கூட்டணிக்குவரலாம். வெற்றிக்கூட்டணி அமைப்பது எப்படி என்பது தலைவருக்கு நன்றாகவே தெரியும். உரிய காலத்தில் உறுதியான கூட்டணியை அமைப்பார் தலைவர் கலைஞர்.

**கேள்வி:- கலைஞர் மீதும் அவருடைய ஆட்சி மீதும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக் களை வைக்கிறாரே ஜெயலலிதா?**

ஜனநாயக நாட்டில் விமர்ச்சிப்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. அந்த வகையில் ஜெயலலிதாவும் குற்றச்சாட்டுக்களை வைக்கட்டும். ஆனால் அவர் சொன்ன குற்றச் சாட்டுக்களுக்கு ஏதாவது ஆதாரங்கள் உண்டா? தான் சொன்ன குற்றச்சாட்டை இதுவரை அவர் நிருபித்தது உண்டா? ஜெயலிதாவின் குற்றச்சாட்டுகளுக்கு உடனுக்குடன் ஆதாரபூர்வமாக பதிலடிகொடுத்து வருகிறார் தலைவர் கலைஞர். ஆனால் அவரின் அறிக்கைகளை படிக்காமலேயே மீண்டும் மீண்டும் பாடிய பழைய பல்லவியை பாடி வருகிறார் ஜெயலிதா

**கேள்வி:-கலைஞர் தன்னுடைய கோபலபுரம் வீட்டில் 780 சதுர அடி மாநகர ஆட்சி இடத்தை ஆக்கிரமித்திருப்பதாக கூட குற்றம் சாட்டியிருக்கறாரே ஜெயலலிதா?**

இதற்குத் தெளிவான பதிலை சென்னை மேஜர் மா.சுப்பிரமணியம் விளக்கமாகவே கொடுத்திருக்கிறார். தன்னுடைய கோபாலபுரம் வீட்டையே தானமாக தருகிறார். தலைவர் கலைஞர். அப்படிப்பட்ட தலைவரைப்பற்றி பேச ஜெயலலிதா வுக்கு தகுதி இருக்கிறதா? ஓய்வெடுப்பதற்காக அவர் கட்டியிருக்கும் சிறுதாவூர் பங்களா தலித் மக்களுக்காக கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது என்று அவருடன் கூட்டணியில் இருக்கும் தோழர்களே குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இன்னொரு ஓய்வுத்தலமான கொடநாடு எஸ்டேட் பகுதியில் பாதையை மறைத்து தன் எஸ்டேட் வழியாகச் செல்ல அந்தப் பகுதி மக்களுக்கு தகுதி இல்லை என்று சொல்பவர்தானே அம்மையார் ஜெயலலிதா.

**கேள்வி:-தஞ்சை அல்லது திருவாரூரில் கலைஞர் போட்டியிடலாம் என்றும் கூட பேசப்படுகிறதே?**

தமிழகத்தின் எந்தத் தொகுதியில் நின்றாலும் பெருவாரியான வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் தலைவர்.

**கேள்வி:-தஞ்சைப் பெரிய கோயில் விழா குறித்த சென்டிமெண்ட் பயம் ஒரு சில தி.மு.காவினர் மத்தியிலேயே நிலவுகிறது கலைஞரின் முடிவை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

பகுத்தறிவு பாசறையில் வளர்ந்த பெரியாரின் வழித்தோன்றலுக்கு எந்த செண்டிமெண்டும் கிடையாது என்று நிரூபித்து இருக்கிறார் தலைவர்.

*நன்றி:-நக்கீரன்*

# ஒஸ்டின் பெர்னாண்டோவின் சாட்சியத்திற்கு எதிராக தயாசந்தகிரி சாட்சியமளிக்க முடியும்

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவின் சாட்சியத்திற்கு எதிராக முன்னாள் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி சாட்சியமளிக்க முடியும் என உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் முன்னிலையில் தயாசந்தகிரி சாட்சியமளிக்க வேண்டும் எனவும், ஊடகங்களில் மறுப்புத் தெரிவிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து தயாசந்தகிரி முதலில் தமக்கு அறிவித்ததாக ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எனினும், யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளதோடு, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகளை பிழையான வழியில் இட்டுச்செல்ல ஒஸ்டின் பெர்னாண்டோ முயற்சி மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# பிரதியமைச்சர் பதவியொன்றை வழங்குவதாக ஜனாதிபதி உறுதி

## பிரபாகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதி அமைச்சர் பதவி ஒன்றை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு உறுதியளித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் அந்த சந்தர்ப்பத்தில் தமக்கு பிரதி அமைச்சுப் பதவி ஒன்றை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக பல்வேறு அமைச்சுக்களின் ஊடாக 12 மில்லியன் ரூபா நிதி தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதெனவும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் அமைப்பாளர்களுடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது அரசாங்கத்தில் இணைந்து கொண்டுள்ள பிரபா கணேசனுக்கு ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு விடுத்திருந்த காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்தது.

நேற்றைய தினத்திற்குள் அரசாங்கத்தை விட்டு வெளியேறாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலக்கெடு தொடர்பிலான பதிலை, தாம் கட்சித் தலைமைத்துவத்திற்கு எழுத்து மூலம் நேற்றைய தினம் அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# இத்தாலிக்கான இலங்கைத் தூதரகத்தில் பாரிய நிதி மோசடி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இத்தாலிக்கான இலங்கைத் தூதரகத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 13 மில்லியன் ரூபா 93ஆயிரம் யூரோக்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக் கணக்காய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கையர்களிடமிருந்து தமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் ஹேமந்த வர்னகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது நிதி மோசடி இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், தூதரக த்தில் கடமையாற்றி வரும் சிலருக்கு இந்த மோசடிகளுடன் தொடர்பிருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிதி மோசடி தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# பரிசளிப்பு விழா

(கொழும்பு)

தமிழ்க் கதைஞர் வட்டத்தின் (தகவம்) பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 28 ஆம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணி முதல் 7.30 மணி வரை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தலைவர் மாத்தளை கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.மௌனகுரு கலந்து சிறப்பிப்பதுடன் பாராட்டுரையை தேசிய கலை இலக் கியப் பேரவையைச் சேர்ந்த சோ.தேவராஜா வழங்கவுள்ளதுடன் சிறப்புரையை உளவள ஆலோசகரும் எழுத்தாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் வழங்கவுள்ளார்.


தொடர்ந்து மூத்த எழுத்தாளர் கே.ஆர். டேவிட்டை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (6-4)

# இரத்ததானம் வழங்கல்

யாழ். போதனாவைத்தியசாலையின் இரத்த வங்கியினரால் ஆலய வளாகத்தில் இன்று சனிக்கிழமை நடமாடும் இரத்த வங்கி சேவையொன்று நடத்தப்படவுள்ளது.

இவ் உயிர் காக்கும் உன்னத பணிக்கு இரத்தம் வழங்கி உதவிசெய்ய விரும்புவோர் இதில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று மஞ்சத் திருவிழா



படங்கள் -அரவிந்

## மஞ்சத்திலே வருவாய்

நல்லூர் என்னும் பதியினிலே !
நலம் தந்து அருள் புரிபவனே!
எல்லை இல்லா உன் புகழை
எழிலாய் பாட அருள் புரிவாய்

மஞ்சள் மாலைப் பொழுதினிலே!
மங்கையர் இருவர் புடைசூழ,
மஞ்சம் என்னும் ரதமேறி
மகிழ்வுடனே வீதியுலா வந்திடுவாய்

திருமதி உ.பூமணி, வடலியடைப்பு

## அன்பை பொழிந்திடுவாய்

மஞ்ச திருவிழா தான் -எமக்கு
மானிடப் பெருவிழாதான்
அழகு கடவுள் தான் நீ - எம்மீது
அன்பை பொழிந்திடுவாய்
நாதஸ்வர ஒலியில் -நல்லூர்
கந்தன் வந்திடுவான்
அரோகரா சொல்லிடுவோம் -கந்தன்
அருளை பெற்றிடுவோம்

சி.மகிழ்நன்

## திருமஞ்சத்தில் எழுந்தருள்வாய்

நல்லை முருகா உன் முல்லைச் சிரிப்பாலே
தொல்லை வினை போக்கைய்யா - என் தெய்வா
எல்லை இல்லாத ஆனந்தம் தந்திடும்
கொள்ளை அழகா முருகா வடிவேல் கந்தா
எம்மை உருக்கும் கருணை விழியும் -உன்
திரு அருள் பொலிந்திடும்
திருமஞ்சத்தில் எழுந்து நல்லை முருகா - உன்
அடியார்களுக்கு இல்லை எண்ணாது இன்பம் தந்து
துன்பம் தீரய்யா எழில் வடிவனே
நல்லை முருகனே

வி.கே.கே.மகிந்தன் , நயினை

## மங்கல இசையோடு மஞ்சத்தில்

மஞ்சத்தில் மலர்கள் மணம் பரப்ப
மங்கல இசையோடு சங்கொலி இணைய
தஞ்சமெனத் திரண்ட தொண்டர் தொட்டு
தம்கையால் இழுக்கின்றார் திருமுருகன் மஞ்சத்தை
அஞ்சேலென அடியார்க்கு அருளுரை வழங்கும்
ஆறுமுகன் அருளினை ஆவலுடன் வேண்டி
சஞ்சலம் நீங்கி சிறப்பொடு வாழ
சண்முகனைப் பணிகின்றார் சிரமேல் கரங்குவித்து

குளப்பிட்டி க.அருமைநாயகம்


நல்லூரானின் மஞ்சத் திருவிழா
சிறக்க வாழ்த்துகிறோம்

கஜமுகன் ஹாட்வெயர்

இல.147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P- 021 222 2833



# ஈழத்தவர் வரலாறு

(14)

## 3.ஈழராஜா எல்லாளன்



எல்லாள மன்னன்

### எல்லாளன்

கி.மு.3 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு.247) கி.மு.1ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு.29) இடைப்பட்ட 220 ஆண்டுகால அனுராதபுர அரசின் வரலாற்றை நோக்கினால் இக்கால எல்லைக்குள் ஆட்சிபுரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்ததைக் கண்டு கொள்ளலாம். ஆயினும், இக்கால வரலா[illegible]க் பல அத்தியாயங்களில் கூறும் ம[illegible]சம் தமிழ் மன்னர்களின் ஆட்சியைச் சில செய்யுட்களில் மட்டுமே கூறி முடிக்கின்றது. எல்லாளன் என்ற தமிழ்மன்னனை வெற்றிகொண்டதன் மூலம் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக வர்ணிக்கப்பட்ட துட்டகாமினியின் 24 ஆண்டுகால ஆட்சியை 843 செய்யுட்களில் கூறும் மகாவம்சம், 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி நடாத்திய எல்லாளனை 21 செய்யுட்களில் மட்டும் கூறுகிறது. இது ஒன்றை பாளி இலக்கியங்களில் தமிழ் மன்னர்களின் வரலாறு மறைக்கப்பட்டுள்ளமைக்குச் சிறந்த சான்றாகும்.

அனுராதபுரத்தைச் சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களிடமிருந்து கைப்பற்றிய அசேலன் என்பான், 10 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். கி.மு.145 ஆம் ஆண்டு எல்லாளன், உத்தரதேசத்திலிருந்து பெரும் படையுடன் தண்டெடுத்து அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மீண்டும் இலங்கையின் ஆட்சி தமிழரிடம் வந்து சேர்ந்தது. எல்லாளனைச் சோழ இளவரசனாகவும், தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தவனாகவும் பாளி இலக்கிய நூல்கள் கூறுகின்றன.

ஆனால், அத்தகைய ஒரு சோழன் இருந்ததாகத் தமிழ்நாட்டு வரலாற்றில் ஆதாரங்கள் எதுவுமில்லை. இந்த மன்னன் உத்தர தேசத்தின் ஒரு பகுதியிலிருந்து அனுராத புரத்தின் மீது படையெடுத்ததாகக் கொள்வதே ஏற்புடையதாகும்.

ஏனெனில், வவுனிக்குளத்தினை முதன் முதல் கட்டியவன் எல்லாளன் என அடையாளம் காணப்படுகின்றது. உத்தரதேசக் குறுநில மன்னனாக எல்லாளன் முதலில் விளங்கியமையால் தான் வவுனிக்குளத்தை அக்கால வேளையில் அமைப்பிக்க அவனால் முடிந்தது என ஊகிக்கலாம்.

**(கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)**

ஆங்கிலேய நாட்டவரான எச்.பாக்கர் மகாவம்சத்தில் அனுராதபுரத்திற்கு வடக்கே யமைந்துள்ளதாகக் கூறப்பட்ட பெலிலாபியை பூநகரியின் தென்னெல்லையிலுள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் ஆரம்பத் தோற்றம் எல்லாளனின் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாமெனக் கூறியுள்ளார்.

பாளி இலக்கியங்களில் 'எலாரா' என்று அழைக்கப்படும் தமிழ் மன்னன் ஏலேலன், எல்லாளன் எனத் தமிழில் அழைக்கப்பட்டு வருகிறான்.

உண்மையில் ஈழராஜா என்ற பெயரே பாளியில் எலாரா (எல்லாளன்) என மருவியதாகப் பேராசிரியர் வேலுப்பிள்[illegible] குறிப்பிட்டுள்ளார். இது ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்தாகும்.

எல்லாளன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவனின் நீதி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்கும் பாளி நூல்கள், இவன் தவறான மார்க்கத்தினைத் (இந்து மதத்தினை) தழுவியவன் எனவும் கூறப் பின்நிற்கவில்லை.

இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், தன் பழைய மதநம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகிறது. பேராசிரியர் கைகர் இப்பழைய மதநம்பிக்கையென்பது இந்துமதத்தையே குறிப்பிடுவதாகக் கருதுகிறார். எல்லாளன் பகைவர்க்கும் நண்பர்களுக்கும் சமநீதி வழங்கியதாகக் கூறும் மகாவம்சம், அவனது நீதி நெறிதவறாத ஆட்சியை மனுநீதிச் சோழனின் கதைகளோடு இணைத்து விபரித்துள்ளது.

எல்லாளனின் சயன அறையில் ஓர் ஆராய்ச்சிமணி கட்டப்பட்டிருந்தது. நீதி வேண்டுவோர் எந்தநேரமும் கோட்டை வாசலில் தொங்கும் கயிற்றை இழுத்து இந்த மணியை ஒலியெழுப்பின் மன்னன் உடன் வந்து விசாரித்துத் துயர் தீர்ப்பான். எல்லாளனுக்குஒருமகனும்ஒருமகளும்பிள்ளைகளாவர்.

ஒருநாள் ஒரு தேரில் திஸ்ஸ வாவியை நோக்கி எல்லாளனின் மகன் பயணப்பட்ட போது, வழியில் பசுவுடன் படுத்திருந்த கன்றின் கழுத்தின் மேல் தேர்ச்சில், ஏறியதால், கன்று அவ்விடத்தில் இறந்துவிட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்து எல்லாளனிடம் நீதி கேட்டது. எல்லாளன் தனது மகனின் தலையைத் தேர்க் காலிலிட்டு அதேவிதமாக மரணமேற்படுத்தி நீதி வழங்கினான்.

பாம்பொன்றுக்கு இரையான குஞ்சையிழந்த தாய்ப்பறவை ஆராய்ச்சி மணியை அடித்தது. மன்னன் அந்தப் பாம்பினைப் பிடித்து வரச்செய்து, அதன் வயிறு கீறப்பட்டுக் குஞ்சு வெளியில் எடுக்கப்பட்டது. பின்னர் பாம்பு மரத்தில் தொங்கவிடப்பட்டது. ஒரு வயோதிப மாது வெயிலில் அரிசியைக் காயப்போட்டிருந்த போது, பருவம் தப்பிப் பொழிந்த மழையால் அரிசி முழுவதும் பழுதடைந்து போனது. அவள் எல்லாளனிடம் முறையிட்டபோது, அவன் வருணனிடம் வாரத்திற்கொரு தடவை இரவில் மட்டும் மழைபொழிய வேண்டுதல் விடுத்ததாக மகாவம்சம் வருணிக்கின்றது.

எல்லாளனின் நீதிவழுவாமையை கூறமுயலும் இக்கதைகள் நம்பகமானவையல்ல. அவனது தென்கோலாட்சியை புலப்படுத்த மகாவம்சம் எடுத்துக்கொண்ட ஜதீகக் கதைகள் எனலாம். எனினும் மகாவம்சம் கூறுகின்ற ஒரு கதை எல்லாளன் சமயத்துறையில் பௌத்தத்துக்கு ஆதரவு அளித்தான் என்பதையும் போற்றிப் பாதுகாத்தான் என்பதையும் நிரூபிக்கின்றது.

**கலாநிதி க.குணராசா**
செங்கை ஆழியான்


எல்லாளன் தேரேறி சேத்திய கிரி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, தேரின் அச்சு தாதுகோபம் ஒன்றில் பட்டு தாதுகோபத்திற்கு சேதத்தை ஏற்படுத்தியது.மன்னன் தேரினின்றும் கீழே குதித்து, தனது தலையை உடனடியாகச் சீவிடுமாறு, அமைச்சர்களிடம் கூறினான். "தெரியாமல் நிகழ்ந்தது அமைதியடைக. தூபத்தைத் திருத்தி விடுவோம்" என்றனர் அமைச்சர்கள். 15 கற்களே சிதைவடைந்திருந்தன. அப்படியிருந்தும் அந்த தாது கோபத்தை புனரமைக்க எல்லாளன் 15 ஆயிரம் கஹாப் பணங்களைச் செலவிட்டான்"

(தொடரும்)

# பல மொழிகளுக்கு தமிழே மூல வரிவடிவம்

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

(3)



### பிரகிருதம்

பிரகிருதம் என்பது வட இந்தியாவிலே ஆதிகாலத்தில் பயன்பாட்டில் இருந்த மொழியாகும் இந்த மொழிப் பிறப்பினையும் அதன் வழக்கத்தினையும் தேவநேயப்பாவணர் மறுத்துரைத்து பிரகிருதம் என்பது வடக்கில் பயன்படுத்திய வடதிராவிடம் என்றே கொள்ளப்பட வேண்டும் என தனது ஆராச்சியின் போது குறிப்பிடுகின்றார். தேவநேயப் பாவணர் அவர்கள் கால்டுவெல் வழியிலே தொடர்ந்து ஆராய்ச்சிகளைச் செய்து இந்திய மொழிகளில் தமிழே சகல மொழிகளுக்கும் தாய்மொழியென 1900-81 காலப்பகுதியில் நிறுவினார்.

மேலும் சிந்துவெளி முத்திரைகளைவிட அடுத்ததாகக் கண்டுபிடிக்கப்பெற்ற அசோகன் கல்வெட்டு பிரகிருதத்திலேயே எழுதப்பட்டுள்ளது. பிரகிருதம் என்பது வடதிராவிடம் என்பதனை விளக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார் பாவாணர். ஆதாரம் 3.

### தென்இந்திய குகைக் கல்வெட்டுக்கள்

தமிழ் எழுத்தின் வரிவடிவம் சிந்து வெளியின் சித்திர வரி வடிவத்தினைப் பின்பற்றியே அமைந்தது. அதற்குப் பின்பு தொடர்ந்து வந்த வரிவடிவங்களின் பரிணாம வளர்ச்சியே இன்று காணப்படும் வரிவடிவமாகும்.

இதனை மறுப்பவர்களும் உண்டு. சிந்து வெளி நாகரீக காலத்தே பதிக்கப்பெற்ற சித்திர வடிவங்களும் இதனைத் தொடர்ந்து கண்டெடுக்கப் பெற்ற கடலூர், சானூர், கொடு மணல் மற்றும் ஆதிச்சநல்லூர் கல்வெட்டுக்கள் தமிழ் வரிவடிவம் எப்படியாக வளர்ச்சி பெற்றன என்பதற்குச் சான்றாக அமை கின்றன.

இதனைவிட திருநாதன் குன்றத்து கல்வெட்டின் காலம் கி.மு 2ஆம் நூற்றாண்டு என வரையறை செய்யப்பட்டுள்ளது. இது உண்மையான தமிழ் வரிவடிவத்தினைப் பிரதிபலித்தது. பிரம்மகிரி அகழ்வாராச்சிகள் பெருங்கற்காலத்து மக்கள் கி.மு 5ஆம் நூற்றாண்டளவில் தென்நாட்டில் வாழ்ந்ததா கவும் அவர்கள் திராவிடர்கள் எனவும். அப் பண்பாட்டின் பண்புகளை சங்க இலக்கியத்தில் காணக்கூடியதாக உள்ளதாக குருராஜ ராவ் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் கருத்துப்படி தமிழகத்தில் பெறப்பட்ட கல்வெட்டுக்களின் காலம் கி.மு 3ஆம் நூற்றாண்டு என்பதாகும். இவை தென் பிராமியில் எழுதப்பட்டிருப்பதாகவும் இதே வகையான தென் பிராமி எழுத்து வகையான எழுத்துக்களே இலங்கையில் கண்டுபிடிக்கப் பெற்ற குகைக் கல்வெட்டுக்களாகும்.

இந்திய வரலாற்று நூலை எழுதிய சத்தியநாதையர் சமஸ்கிருதத்தில் கல்வெட்டு எழுதும் பழக்கம் கி.மு 2ஆம் நூற்றாண்டளவில் தொடக்கம் பெற்றாகவே குறிப்பிடுவர். Histrory of India Vol.1 - P.209. இப்படியாக தமிழகத்திலே சமஸ்கிருதத்தில் கல்வெட்டெழுதப் பெற்றது பல்லவ அரசன் விட்டுணு வர்த்தனன் காலமான கி.பி 6ஆம் நூற்றாண்டிலிருந்து என்கிறார் ஐராவதம் மகாதேவன். - Early Tamil Epigraphy from the times to the Sixth Century AD - P.114.

### தமிழ் வரிவடிவத்தின் வளர்ச்சி

தமிழ் அரிச்சுவடி பற்றி கி.மு 3ஆம் நூற்றாண்டின் தோன்றிய தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகின்றது.

எழுத் தெனப் படுப ...... அகர முதல் னகர இறுவாய் ... முப்பஃதென்ப ... சார்ந்து வரல் மரபின் ... மூன்றலங்கடையே -

... தொல்காப்பியச் சூத்திரம் ...

என அ முதல் ன வரையான தமிழ் உயிரெழுத்து பன்னிரண்டுடன் மெய்யெழுத்துமாக முப்பது என இங்கு காட்டுகின்றார். அத்தோடு குற்றியலிகரம், குற்றியலு கரம் அத்துடன் முப்புள்ளியுடைய ஆய்த எழுத்தெனவும் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் ஒரு கருத்தினைச் சொல்ல விளையும்போது அதனை தனக்கு முந்திய புலவர்கள் சொல்வார்கள் என்றும் அதனை என்மனார் புலவர் என்று பலவிடங்களில் குறிப்பிடுகின்றார். அப்படியாயின் கி.மு 3ம் நூற்றாண்டிற்கு முன்பு பல காலத்திற்கு முன்பே தமிழில் இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு செழித்து வளர்ந்த மொழிக்கோ அன்றி செழித்த இலக்கியங்கள் உள்ள மொழிக்கோ மட்டுமே இலக்கணத்தினைப்

**முருகேசு பாக்கியநாதன் B.A**

படைக்க முடியும். ஆகவே கி.மு 500 ஆண்டளவில் தமிழ் மிகச் செழிப்புற்று இருந்த ஒரு மொழியாகவே இருந்துள்ளது. அதுவே தமிழ்ப் பிராமியாகும்.

சித்திர முத்திரைகளில் சில தனியாகவும் சில ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட முத்திரைகள் சேர்ந்தோ ஒரு எழுத்தை அமைப்பதாகக் கொள்ளமுடியும். தமிழ் வரிவடிவம் தனிக் கோடுகளாலும் தனி வட்டங்களாலும் பல கோடுகளாலும் பல வட்டங்களாலும் எழுதப்படும் எழுத்துக்களாகும். அதனால் தான் சிந்து வெளி முத்திரைகள் தனியாகவோ அன்றி ஒன்றாகவோ அன்றி ஒன்றுக்குமேற்பட்டனவாகவோ சேர்ந்து வரிவடிவங்களை அமைக்கிறது என்று கொள்ள முடியும்.

(தொடரும்)

# யுத்தத்தின் போது காணாமல் போன ஆவணங்களை மீள அளிக்க கோரிக்கை

(கொழும்பு)

யுத்தத்தின் போது காணாமல் போன ஆவணங்களை மீள அளிக்குமாறு வன்னி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தத்தின் போது முக்கிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை இழந்து விட்டதாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேச செயலகங்களில் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பிறப்பு-இறப்பு,விவாக அத்தாட்சிப் பத்திரம் மற்றும் கல்விச் சான்றிதழ்கள் என்பனவே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அதிகளவானோர் முக்கிய ஆவணங்களை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இழந்த ஆவணங்களை மீள அளிப்பது குறித்து கவனம் செலுத்துமாறு வன்னி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-2)

# அமெரிக்காவுடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கை

## விமானப்படைத் தளபதி அறிவிப்பு

அமெரிக்காவுடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக இலங்கை விமானப்படை அறிவித்துள்ளது.

குறிப்பாக ஆழ் கடலில் இடம்பெறும் போக்குவரத்துக்கள் தொடர்பில் இரு தரப்பினரும் கண்காணிப்புக்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளின் மூலம் இரு தரப்பினரும் நன்மை அடைய முடியும் என விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் ரொசான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இரத்மலானையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.

அதி நவீன உபகரணங்களைக் கொண்டு இந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கை அனர்த்தங்கள், தீ, பூமியதிர்வு மற்றும் வெள்ளம் போன்ற அனர்த்த நிலைமைகளின் போது இந்த நவீன கருவிகளைக் கொண்டு பல்வேறு தகவல்களை துல்லியமாக பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்படுகிறது. (6-2)

# இலங்கை -இந்திய மீனவர்களுக்கு இடையில் இடைக்கால ஒப்பந்தம்

இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் இடையே சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இடைக்கால ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதன்படி இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் வருவதற்கு சில விதிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மீனவர்கள் சங்க சம்மேளனத்தின் உறுப்பினரான சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்கள் தொழிலை மேற்கொள்வதற்காக இரு தரப்பு மீனவர்கள் மற்றும் அரசாங்கத்தை சேர்ந்தவர்களை கொண்டு ஒரு கண்காணிப்பு குழு உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை மீனவர்களின் வளங்களை அழிக்காமல் அவற்றை காப்பாற்றக்கூடிய வலைகளை கொண்டு மீன்களை பிடிப்பதற்கான அனுமதியை கொடுத்திருப்பதாகவும் இந்த ஒப்பந்தம் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் இது ஓராண்டு காலத்திற்கு இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு வருடத்திற்கு 70 நாட்கள் மட்டும் இந்திய மீனவர்களின் றோலர் படகுகள் மூலம் இலங்கை எல்லைக்குள் நுழையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-2)

# பாடப்புத்தக விநியோக நடவடிக்கைகள் இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பம்

அடுத்த ஆண்டுக்கான பாடசாலை பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இம்மாதம் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஹோமாகமவில் இரண்டரை கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய களஞ்சியசாலையிலிருந்தே இந்த விநியோகம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 12ஆம் திகதியுடன் விநியோக நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக நூலக வெளியிட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் பாடசாலை புத்தகங்கள் சலுசல நிறுவனத்திற்கு சொந்தமான களஞ்சியசாலையிலிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக வருடமொன்றிற்கு ரூபா 44 இலட்சம் வாடகையாக செலுத்தப்பட்டது.

தற்போது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சிய சாலை அமைக்கப்பட்டுள்ளதால் வாடகைப் பணம் எஞ்சியுள்ளதென்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

களஞ்சியசாலையின் ஏனைய பகுதியும் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் ஏனைய களஞ்சியங்களுக்கு செலுத்தப்படும் 17 இலட்ச ரூபாவும் மீதப்படுத்தபடுமென்றும் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (6-2)

# வடகிழக்கில் 89 ஆயிரம் விதவைகள் உள்ளனர்

## ஆய்வில் தகவல்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் 89 ஆயிரம் விதவைகள் இருப்பதாக அண்மைக் காலத்தில் குறித்த பிரதேசங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் போது தெரிய வந்துள்ளதாக மகளிர் விவகார மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கிறது.

49 ஆயிரம் விதவைகள் கிழக்கு மாகாணத்திலும் 40 ஆயிரம் விதவைகள் வடக்கிலும் இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

உள்நாட்டு மோதல் சுனாமி மற்றும் பல்வேறு விடயங்கள் காரணமாக இவர்கள் விதவைகளானதாக அமைச்சு கூறுகிறது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவிலான 25 ஆயிரம் விதவைகள் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.(6-2)

# 24.08.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- 1511-மலாக்காவை போர்த்துக்கல் மன்னன் அல்பொன்சோ டி அல்புகேர்க் கைப்பற்றினான்.
- 1572-புனித பார்த்தெலோமேயு தினப் படுகொலை: பிரான்சிள் 9ம் சார்ல்சின் கட்டளைக்கேற்ப பிரெஞ்சுப் புரொட்டெஸ்தாந்தர்கள் படுகொலைப் படலம் ஆரம்பமாயிற்று.
- 1690-கல்கத்தா நகரம் அமைக்கப்பட்டது.
- 1814-பிரித்தானியப் படையினர் வோஷிங்டன், டி.சி.யை முற்றுகையிட்டு வெள்ளை மாளிகை உட்படப் பல கட்டிடங்களுக்குத் தீ வைத்தனர்.
- 1821-மெக்சிகோவின் ஸ்பெயினுடனான விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- 1875-கப்டன் மத்தியூ வெப் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதலாவது மனிதர் ஆனார்.
- 1912-அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1929-பாலஸ்தீனத்தில் நிகழ்ந்த கலவரங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட யூதர்கள் கொல்லப்பட்டனர்.
- 1931- பிரான்சும் சோவியத் ஒன்றியமும் தமக்கிடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.
- 1936-அவுஸ்திரேலிய அண்டார்க்ட்டிக் பிரதேசம் உருவாக்கப்பட்டது.
- 1939- நாசி - சோவியத் உடன்பாடு ஹிட்லருக்கும் ஜோசப் ஸ்டாலினுக்கும் இடையில் எட்டப்பட்டது.
- 1949-நேட்டோ ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.
- 1954-அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.
- 1954-பிரேசிலின் ஜனாதிபதி கெட்டுலியோ வார்காஸ் தற்கொலை செய்து கொண்டார்.
- 1968- பிரான்ஸ் தனது முதலாவது ஐதரசன் குண்டை வெடிக்க வைத்தது.
- 1989-வொயேஜர் 2 நெப்டியூனைத் தாண்டியது.
- 1991-சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து மிக்கைல் கொர்பசோவ் விலகினார்.
- 1991-சோவியத் ஒன்றியத்தில் இருந்து உக்ரேன் பிரிந்தது.
- 1992-மக்கள் சீனக் குடியரசுக்கும் தென் கொரியாவுக்கும் இடையில் தூதரகஉறவுகள் ஏற்படுத்தப்பட்டன.
- 1995-விண்டோஸ் 95 வெளியிடப்பட்டது.
- 2004-மொஸ்கோவில் இரண்டு விமானங்கள் தற்கொலைக் குண்டுதாரியினால் தகர்க்கப்பட்டதில் 89 பயணிகள் கொல்லப்பட்டனர்.
- 2006- புளூட்டோ ஒரு கிரகம் அல்லவென அறிவிக்கப்பட்டது.
- 2006- ஐக்கிய நாடுகளின் ஓர் அமைப்பான UNOPS அலுவலர் ஒருவர் அம்பாறை திருக்கோவில் பகுதியில் அலுவலகத்திற்கு அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2008 - சீனாவில் 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டிகள் முடிவடைந்தன.

## பிறப்புகள்

- 1817-டால்ஸ்டாய், ரஷ்ய எழுத்தாளர் (இ. 1875)
- 1906-நாரண துரைக்கண்ணன், எழுத்தாளர், பத்திரிகையாளர்
- 1929-யாசிர் அரபாத், பாலஸ்தீனத் தலைவர் (இ. 2004)
- 1941-இ.பத்மநாப ஐயர், ஈழத்து இலக்கிய ஆர்வலர்
- 1947-பௌலோ கோலோ, பிரேசில் நாட்டு எழுத்தாளர்
- 1963-தா.பாலகணேசன், ஈழத்து எழுத்தாளர்.
- 1965-ரெஜி மிலர், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்
- 1979-மைக்கல் ரெட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புகள்

- 1832 - சாடி கார்னோ, பிரெஞ்சு அறிவியலாளர் (பி. 1796)
- 1972 - வே.இராமலிங்கம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் (பி. 1888)

**1349-ஜெர்மனியின் மாயின்ஸ் நகரில் 6ஆயிரம் யூதர்கள் கொல்லப்பட்டனர்.**



# வீட்டில் சிறப்பான முறையில் பூஜை அறையை அமைப்பதெப்படி ?

தென்மேற்கு மூலையில் பூஜை மற்றும் சேமிப்பு அறைகளை எவ்வாறு வாஸ்து சிறப்புடன் அமைப்பது என விரிவாகக் காண்போம்.

காலையில் எழுந்து குளித்து முடித்தவுடன் முதலில் இறைவனை வழிபட்ட பிறகே, நாம் மற்றக் காரியங்களைச் செய்கிறோம். பூஜை அறையை அதிகநேரம் தியானம், வழிபாடு, படிப்பு போன்ற செயல்களுக்கு பயன்படுத்துகிறோம். இத்தகைய பூஜை அறையை நல்ல காற்றோட்டத்துடனும், வெளிச்சத்துடனும் அமைப்பது அவசியம். இருப்பினும் தென்மேற்கு மூலையில் அமைக்கப்படும் பூஜை அறையை ஜன்னல்கள் ஏதுமின்றி இருட்டாக அமைப்பதே சாஸ்திர சிறப்பு.

தென்மேற்கு மூலையில் படுக்கை அறையை அமைப்பதே சாஸ்திரப்படி முதலிடம் வகிக்கும்.இம் மூலையில் அடைக்கப்பட்ட மாடிப்படியை அமைப்பது இரண்டாவது இடத்தையும், இருட்டான பூஜை மற்றும் சேமிப்பு அறைகளை அமைப்பது மூன்றாவது இடத்தையும் பெறும். பூஜை மற்றும் சேமிப்பு அறைகளை இங்கு அமைக்கும் பட்சத்தில் இந்த அறைகளுக்கு அடுத்து வருமாறு படுக்கை அறையை அமைப்பது அவசியம்.

தென்மேற்கு பூஜை அறையில் அதிக எடையுள்ள பொருட்களை வைக்க வேண்டும்.பணபீரோ, இரும்புப் பெட்டி போன்றவற்றை இந்த அறையின் தென்மேற்கு மூலையில் கிழக்கு அல்லது வடக்குப் பார்த்து அமைக்கலாம். பூஜை அறையின் மேடையை மேற்கு பக்கம் அமைத்து சாமிப் படங்கள் கிழக்கு நோக்குவது போல் இருக்கவேண்டும். பெண் தெய்வங்களின் படங்களை வடக்கு நோக்குவது போலும் வைத்து வழிபடலாம்.

கிழக்குப் பார்த்த பூஜை அறை முதலிடத்தையும், வடக்குப் பார்த்த பூஜை அறை இரண்டாமிடத்தையும் பெறும். தெற்கு அல்லது மேற்கு திசையைப் பார்ப்பது போல் பூஜை அறையை அமைத்துவிடக்கூடாது. பூஜை அறையின் கதவை வடகிழக்கு மூலையில் அமைக்க வேண்டும். இரு கதவுகளை சுவற்றின் மையப் பகுதியில் அமைப்பது அறைக்கு அழகிய தோற்றத்தைத் தரும். இவ்வாறு அமைக்கும் போது கதவுகள் சரியான மையப்பகுதியிலிருந்து ஒரு அங்குலம் உச்சப் பகுதி வரும் திசையின் பக்கம் தள்ளி இருக்கவேண்டும். பூஜை அறையின் தெற்கு, மேற்கு திசைகளில் உள்ள உட்புற மற்றும் வெளிப்புறச் சுவர்கள் சரியான 90 பாகை நேர்கோட்டிலிருப்பது அவசியம்.

கட்டடத்தின் தென்மேற்கு மூலை குறுகியிருப்பது பண நஷ்டம், தொழிலில் பின்னடைவு போன்ற பிரச்சினைகளையும் இம் மூலை நீண்டிருப்பது உடல் நலக்குறைவுகளையும் ஏற்படுத்தும்.சேமிப்பு அறையை இம் மூலையில் அமைக்கும்போதும் தெற்கு மற்றும் மேற்கு சுவர்களின் 90 பாகை கோட்டு அமைப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

தென்மேற்குப் பூஜை அறையில் அதிக எடை மற்றும் உயரமான பொருட்களை வைக்கக் காரணம் எவ்வளவுக்கு எவ்வளவு இம்மூலையில் அதிக எடை மற்றும் உயரம் கூடுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நற்பலன்கள் அவ்வீட்டில் வசிப்போருக்குக் கிட்டும்.

இம்மூலையிலிருந்து உடலுக்கு தீமை பயக்கக் கூடிய புற ஊதா ஒளிக்கதிர்கள் அதிக அளவில் வீட்டிற்குள் ஊடுருவும். எடையுள்ள உயரமான பொருட்களை வீட்டின் இம் மூலையில் வைப்பதால் கூட இவ்வொளிக் கதிர்களை அவை ஈர்த்து, வீட்டிற்குள் கதிர்கள் செல்லும் அளவை கணிசமாகக் குறைக்கும்.

இதன் காரணமாகவே இம் மூலையில் அமைக்கப்படும் அறைக்கு ஜன்னல்களை கூடிய வரை தவிர்க்கவேண்டுமென சாஸ்திரம் வலியுறுத்துகிறது. பூஜை அறையை இங்கு அமைக்கும் பட்சத்தில் ஜன்னல்களை முழுமையாகத் தவிர்த்துவிடலாம். இறைவழிபாட்டிற்குப் பின் இவ்வறையை பூட்டியே வைத்தல் நல்லது.

பொதுவாகக் கட்டடத்தின் தென்மேற்கு மூலையை நாம் உபயோகிக்கும்போது இரத்த ஓட்டம், சுறுசுறுப்பு ஆகியவை குறைவாகவே இருக்கும். எனவேதான் இங்கு அமைக்கப்படும் பூஜை அறைகளில் தியானம் அல்லது வழிபாட்டில் ஈடுபடும் போது மனநிம்மதியும் ஓய்வும் கிடைக்கிறது. அதிகாலையில் உதிக்கும் சூரியனின் ஒளிக்கதிர்கள் மஞ்சள், ஆரஞ்சு மற்றும் இளஞ்சிவப்பு நிறங்களில் இருக்கும். இவற்றை அகச்சிவப்பு ஒளிக் கதிர்கள் என மருத்துவர்கள் அழைக்கின்றனர். இவை பல விதத்தில் உடலுக்கு நன்மை அளிக்கிறது. இவ்வொளிக் கதிர்களை கருவிகள் மூலம் நோயாளிகளின் உடலுக்குள் பாய்ச்சி பல நோய்களை மருத்துவர்கள் குணப்படுத்துகின்றனர். சாமிப்படங்களை கிழக்கு நோக்கி வைக்கும்போது இப்படங்களின் பிரேம் பொருந்திய கண்ணாடிகள் கிழக்கு முகமாக இருப்பதால் அதிகாலையில் உதிக்கும் சூரியனின் அகச்சிவப்பு ஒளிக் கதிர்கள் அதில் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு பிரதிபலிப்பதால் அவ்வீட்டில் வசிப்போருக்கு ஒளிக்கதிர்களின் நன்மைகள் அதிகரிக்கும். பூஜை அறையின் நீளம் சுமார் 8 அடிக்கு மேல் இருக்கும் பட்சத்தில் மேற்குப் பக்கம் இரு மேடைகளை அமைத்துக் கொள்ளலாம்.

முதல் மேடையின் உயரம் அரை அடியாகவும் சுவற்றை ஒட்டிய மேடையின் உயரம் ஒரு அடியாகவும் இருக்கவேண்டும். சுவற்றை ஒட்டிய மேடையின் அகலத்தை ஒற்றை அடியாகவும், முதல் மேடையின் அகலத்தை ஒரு அடியாகவும் அமைத்துக் கொள்ளலாம். இவ்வாறு இரு மேடைகளை அமைப்பதும் பூஜை அறைக்கு அழகிய தோற்றத்தைத் தரும். அறையின் நீளம் குறைவாக இருக்கும் பட்சத்தில் இரு மேடைகள் அமைப்பதைத் தவிர்க்கவேண்டும்.

இறைவனை வழிபடும்போது வடக்கு அல்லது கிழக்கு திசையை நோக்கி வழிபடுவது சிறப்பு. கிழக்கு பார்த்த சாமிப் படங்களை வழிபடும் போது வடக்கு திசையையும், வடக்கு பார்த்த சாமிப்படங்களை வழிப டும் போது கிழக்கு திசையையும் பார்க்க வேண்டும். பொதுவாக நாம் வடக்கு மற்றும் கிழக்கு திசைகளை நோக்குபோது இரத்தம் ஓட்டம், ஞாபக சக்தி, சுறுசுறுப்பு ஆகியவை அதிகமாக இருப்பதுடன், நமக்கு மேலோங்கிய சிந்தனைகளும் அதிகரிக்கும்.பூஜை அறையில் ஐந்து முக தீபத்தை ஏற்றுவது சிறப்பு. தீபம் மற்றும் விளக்குகளை ஒரு முகமாக ஏற்றும்போது தீபத்தின் திசை கிழக்கு நோக்கி இருக்கவேண்டும். இருமுகமாக ஏற்றும் போது தீபத்தின் திசை கிழக்கு மற்றும் வடக்கு திசைகளை நோக்கி இருக்க வேண்டும்.

பூஜை மற்றும் வழிபாடுகளை முடித்தவுடன் சிலர் தியானம், பாட்டு மற்றும் வேதங்களை படித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். இத்தகைய செயல்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு திசைகளுக்கு இடைப்பட்ட வடகிழக்கு திசையை நோக்குவது முதலிடத்தையும் கிழக்கு திசையை நோக்குவது இரண்டாவது இடத்தையும் வடக்கு திசையை நோக்குவது அதற்கடுத்த இடத்தையும் பெறும்.

சேமிப்பு அறையை தென்மேற்கு மூலையில் அமைக்கும்போதும் ஜன்னல்களை தவிர்ப்பது அவசியம். காற்றோட்ட ஜன்னலை யாவது அமைத்தாக வேண்டுமென்ற பட்சத்தில் அறையின் உச்சப் பகுதியான வட மேற்கு மூலையின் மேற்கிலோ, தென்கிழக்கின் தெற்கிலோ அமைத்துக் கொள்ளலாம். அறையின் வாசலை வடகிழக்கு மூலையில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமைக்க வேண்டும்.

கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி அறையின் தெற்கு, மேற்கு திசைகளிலுள்ள உட்புற மற்றும் வெளிப்புற சுவர்களை சரியான 90 பாகை நேர்கோட்டில் இருக்கவேண்டும்.சேமிப்பு அறையில் பொருட்களை எடை மற்றும் உயரம் என்ற அடிப்படையில் தென்மேற்கு மூலையில் அதிக எடை மற்றும் உயரமான பொருட்களையும், அதற்கடுத்த தென்கிழக்கு, வடமேற்கு என எடை மற்றும் உயரம் குறைந்து கொண்டே வருவது போல் அமைக்கவேண்டும். வடகிழக்கு மூலையில் சிறிய வெற்றிடம் இருப்பது சிறப்பானதாகும்.

பரண்களை அறையின் தெற்கு மற்றும் மேற்கு திசைகளில் அமைக் கலாம்.சேமிப்பு அறையையும் தென்மேற்கு பூஜை அறையைப் போலவே அதிகநேரம் அடைத்து வைப்பது நல்லது.சமையல் அறை யுடன் இணைக்கப்பட்ட சேமிப்பு அறையைப் போல் இல்லாமல் இந்த அறையைப் பெரிதாக அமைத்து மற்ற பொருட்களையும் இங்கு வைக்கலாம். (முற்றும்)

# காரைநகரில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைக்கப்படல் வேண்டும்

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் காரைநகருக்கான தனியான பிராந்திய சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவு பணிமனை அமைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பிரதேச ஒருங் கிணைப்புக் குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து பிரதேச சுகாதாரம் தொடர்பாக ஆராயும் போது, ஊர்காவற்றுறை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பொது சுகாதார பரிசோதக பதில் மேற்பார்வையாளர் ந.சச்சிதானந்தம் சில தீர்மானங்களை முன்வைத்து உரையாற்றினார்.

காரைநகர் பிரதேசமும் ஊர்காவற்றுறை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கட்டுப்பாட்டிலேயே அமைந்து வருகின்றது. இப்பிரதேசம் கடல் நீரினால் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இப் பிரதேசத்துக்கான தடுப்பு மருந்து விநியோகம் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆகவே இவ் இடர்பாடுகளை நீக்க காரைநகர் பிரதேசத்திற்கான தனியான பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைக்கப்படல் வேண்டும்.

காரைநகர்ப் பிரதேசத்தில் நெருப்புக் காய்ச்சல் மக்களிடையே பரவி வருகின்றது. இதனைத் தடுப்பதற்கு வீடுகளில் மலசலகூட வசதிகள் இல்லாதவிடத்து அதனை அமைத்துக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும்.இப்பகுதியில் டெங்குநோய் பரம்பலைக் கட்டுப்படுத்தி இதற்கான விழிப் புணர்வு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கசூரினா கடற்கரையில் உல்லாசப் பயணிகளினால் வீசப்படுகின்ற ஐஸ்கிறீம் கப்,இளநீர்க் கோம்பைகள் மற்றும் வெற்றுப் போத்தல்கள் ஆகியவை உடனுக்குடன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் சுகாதார உத்தியோகத்தர்களை தீவகப் பிரதேசத்திற்கு முன்னுரிமைப்படுத்தி நியமிக்கப்படல் வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.மேற்படி கூட்டத்தில் காரைநகர் வீதிகள், மின்சாரம், விவசாயம், சுகாதாரம், கடற்றொழில், போக்குவரத்து, கல்வி, வங்கிகள் மற்றும் சமுர்த்தித் திட்டங்கள் போன்றவற்றின் குறைபாடுகளை குறித்த திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டு ஆராய்ந்தனர். (6-2-246)

# கற்றபாடங்கள் ஆணைக்குழுவின் 2ஆம் கட்ட விசாரணைகள் ஆரம்பம்

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் இரண்டாம் கட்டச் சாட்சி விசார ணைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

சர்வதேச விவகாரங்களுக்கான அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம் பெறும் இவ்விசாரணைகள் இன்றும் நடைபெறவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இம்முறை சாட்சியமளிப்பதற்காக நான்கு பேர் முன் வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர அடுத்த மாதத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளவர்களிடம் விசாரணைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர் நிறுத்த உடன்படிக்கை தோல்வியடைந்தமைஉள்ளிட்ட ஐந்து விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென ஜனாதிபதியினால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# ‘ஜெயலலிதாவின் பூச்சாண்டிக்கு நான் பயந்தவள் அல்ல’

## சீறுகிறார் கனிமொழி



இலக்கிய மேடை, பொது மேடை, அரசியல் மேடை என்கிற வித்தியாசம் இல்லாமல் எல்லா மேடைகளிலும் கனிவான பேச்சையே வெளிப்படுத்தி வருபவர் கவிஞர் கனிமொழி. அப்படிப்பட்டவரே தூத்துக்குடியில் நடந்த கட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஜெயலலிதாவுக்கு எதிராக சீறியிருக்கிறார். கோவை, திருச்சி என்று பொதுக்கூட்டங்களை கூட்டி தி.மு.க.வுக்கு எதிராகவும், கலைஞர் குடும்பத்துக்கு எதிராகவும் அதிரடி அட்டாக் பேச்சினை ஜெயலலிதா வெளிப்படுத்தி வரும் நிலையில் கனிமொழி எம்.பி. நக்கீரனுக்கு வழங்கிய பேட்டியிலிருந்து...

கேள்வி :- தேர்தல் வருடம் தொடங்கிவிட்டது. பொதுத்தேர்தலுக்கு தயாராகி விட்டதா தி.மு.க?

சட்டமன்ற பொதுத் தேர்தலை சந்திக்க தி. மு.க. எப்போதும் தயாராகவே உள்ளது. 5-வது முறையாக முதல்வராக பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்களே எங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். தலைவரின் ஆட்சிக்கு தங்கள் ஆதரவு என்ன என்பதை கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதே வெளிப்படுத்தி விட்டார்கள் தமிழக மக்கள். அந்த தேர்தலுக்கு பிறகும் நிறைய திட்டங்கள் முழுமை பெற்றிருக்கின்றன. எனவே வரும் சட்ட மன்றத் தேர்தலிலும் முழுமையான வெற்றியை தி.மு.க.கூட்டணி பெறும்.

கேள்வி :-நலத்திட்டங்களால் மட்டுமே வெற்றி பெற்று விட முடியும் என்று நினைக்கிறீர்களா?

கடந்த 1996-2001 ஆட்சி காலத்திலும் நிறைய திட்டங்களை செயல்படுத்தியது தி.மு.க.ஆனால் அதன் பிறகு வந்த தேர்தலில் தி.மு.க. ஆட்சி அமைக்க முடியாமல் போனதே?

2001ஆம் ஆண்டு தேர்தலின் போது ஜெயலலிதாவின் வாய்ச்ச வடால்களையும்,பொய்ப் பிரசாரத்தையும் நம்பி மக்கள் வாக்களித்துவிட்டார்கள்.ஆனால் தங்களின் நம்பிக்கை எவ்வளவு பொய்யானது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டார்கள். அந்த அம்மையாரின் 5ஆண்டு கால ஆட்சி காலத்தில், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் விவசாயிகள், சாலைப் பணியாளர்கள்,காவல்துறையினர் என்று எத்தனை லட்சம்பேர் பாதிக்கப்பட்டார்கள் என்பதை எல்லோருமே நினைவில் வைத்திருக்கிறார்கள். அதனால் மீண்டும் ஒரு முறை ஜெயலலிதாவால் மக்களை ஏமாற்ற முடியாது.

கேள்வி :- கோவை, திருச்சி என்று ஜெயலலிதா பேச்சை கேட்க கூட்டம் கூடிவருகிறதே?

என்றைக் காவது ஒரு நாள் அத்திப்பூத்தார் போல கூட்டங்களுக்கு வருபவரை பார்க்க கூட்டம் வரும்தானே? 4 வருஷம் காணாமல் போன ஒருத்தர் வருகிறாரே... அவர் எப்படி இருக்கிறார் என்று பார்க்க வருகிறார்கள். வந்த கூட்டத்தில் பொதுமக்கள் எத்தனை பேர் இருந்தார்கள்? பெரும்பாலும் அ.தி.மு.க.வினர்தான் வந்திருப்பார்கள். தங்கள் கட்சித்தலைவியை சந்திக்கவே முடியாத நிலையில் இருக்கும் கட்சிக்காரர்கள் இப்படிப்பட்ட கூட்டங்களிலாவது தலைவியை பார்க்க முடியுமா என்ற நினைப்பில் வந்திருப்பார்கள்.

இந்த கூட்டம் தானாக வந்த கூட்டமா? திரட்டப்பட்ட கூட்டம்தானே? அதுவும் தமிழகம் முழுவதிலும் இருந்து வண்டி வாகனம் வைத்து, தலைக்கு நூறு, இருநூறு என்று கொடுத்து அழைத்து வரப்பட்ட கூட்டம் தானே?

அபூர்வமாக கூட்டம் போடு பவர்களுக்கு வருகிற கூட்டத்தை விட தினம் ஒரு நிகழ்ச்சி என்று கலந்துகொள்ளும் தலைவர் கலைஞர் பொதுக்கூட்டத்துக்கு வரும் கூட்டம் அதிகமாகத்தானே இருக்கிறது.

**கேள்வி :- ஒரு பெண் அரசியல்வாதியாக ஜெயலலிதாவின் பொதுக்கூட்ட பேச்சினை எப்படி பார்க்கிறீர்கள்? உங்களையும் அடிக்கடி விமர்சிக்கிறாரே?**



கோபாலபுரம் வீடு

அரசியல் வாதியில் ஆண், பெண் என்கிற வித்தியாசம் எல்லாம் எனக்கு இல்லை. ஒரு அரசியல் கட்சியின் தலைவராக ஜெயலலிதாவின் பேச்சு யாருக்கும் முன் மாதிரியாக அமையவில்லை. ஜெயலலிதாவின் பொதுக்கூட்ட பேச்சினை எந்த அரசியல் கட்சியின் அடிமட்ட பேச்சாளரும் கூட முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளகூடாது.

ஜெயலலிதாவின் பூச்சாண்டிக்கெல்லாம் பயந்தவள் நானல்ல. எதிர்ப்புகள் தான் ரத்தினக்கம்பளங்கள் என்று பழகியவர்கள் தி.மு.க.வினர். ஒரு அரசியல் கட்சியின் தலைமையே அநாகரிகமாக பேசும்போது அந்த தலைமையின் கீழ் செயல்படும் பேச்சாளர்கள் எப்படி பேசுவார்கள் என்று எண்ணிப்பாருங்கள்.

நாகரிக அரசியலுக்கு ஏற்ற வகையில் ஜெயலலிதா பேசவில்லை.

**கேள்வி :- தன்னுடைய பேச்சில் பிரதானமாக கலைஞர் குடும்ப அட்டாக்கைத்தான் வெளிப்படுத்துகிறார் ஜெயலலிதா தேர்தல் பிரச்சாரத்திலும் இதுவே எதிரொலிக்கும் என்கிறார்கள் அ.தி.மு.க.வினர் இதை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?**

குடும்பமாக ஜெ.வை எதிர்கொள்வோம். தி.மு.க.வே ஒரு குடும்பம் என்ற உணர்வில்தான் எங்களை வளர்க்கிறார் தலைவர். ஒரு அரசியல் கட்சித் தலைவரின் மகள் என்பதற்காகவே எனக்கான அரசியல் வாய்ப்புகள் மறுக்கப்பட முடியாது. குடும்ப அரசியல் என்று பேசுகிற ஜெயலலிதாவின் யோக்கியதை என்ன?ஒரு குடும்பத்தையே தத்தெடுத்து அரசியலில் புகுத்த வில்லையா அவர்? ஆடம்பரமாக ஒரு திருமணம் செய்து வைப்பதற்காகவே ஒரு பிள்ளையை தத்தெடுக்கவில்லையா?

**கேள்வி :- காங்கிரஸ் - தி.மு.க. உறவு சரியில்லை என்றும் விரைவில் தங்களுடைய கூட்டணிக்கு காங்கிரஸ் வந்துவிடும் என்றும் காத்திருக்கிறதே அ.தி.மு.க?**



கனவு காண்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. தூங்கி எழுந்ததும்தான் உண்மை எது என்பது புரியும். இப்போது கனவு கண்டு கொண்டிருக்கிறார் ஜெயலலிதா. 4 ஆண்டுகால தூக்கத்திற்கு பிறகு இப்போது தான் கண் விழித்திருக்கிறார். இன்னும் தூக்கம் முழுமையாக கலையவில்லை. உதயசூரியன் உண்மை நிலவரத்தை புரிய வைக்கும்.

இந்த கட்சி வருகிறது... அந்த கட்சி வருகிறது என்று சொல்லிக்கொண்டிருப்பதற்கு இன்னொரு காரணம்... சொந்தக் கட்சிக்காரர்களை தக்க வைத்துக்கொள்ள வேண்டுமே என்கிற வேண்டுமே தான். அ.தி.மு.க.வின் முன்னணி தலைவர்கள் எல்லோரும் தி.மு.க.விற்கு வந்துகொண்டிருப்பதால் எங்கே தன் கூடாரம் காலியாகிவிடுமோ என்கிற கவலையில் இருக்கிறார் ஜெயலலிதா. கலைந்து கொண்டிருக்கும் கூட்டத்தை தடுத்து நிறுத்துவதற்காகத்தான் இப்படிப்பட்ட பிரச்சாரங்களை செய்து வருகிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் பாடசாலைகள் வந்தமையால் நிலவி வந்த கல்விக் கொள்கைக்கு அடிக்கடி இருந்து வந்த தடைகள் நீங்கியதும் ஒரு சீரான கல்வி கொள்கை செயற்படுத்தலைத் தடையின்றி எளிதாக்கியது கல்விக்கான திட்டமிடலும் கொள்ளையாக்கலும் புத்துயிர் பெற்றன.

கல்வி கற்பிக்கும் நுட்பத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பல ஆராட்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன இவற்றுள் வெவ்வேறு பாடங்களில் பாடசாலைப் பாடப் புத்தகங்களை இயற்றுதல், பாடத்திட்டங்கள் தயாரித்தல், விரிவான வழி காட்டிகளை முறைப்படி எழுதுதல், அவற்றைப் பயன்படத்தக்க முறையில் உபயோகிக்கப் புதிய கற்பிக்கும் முறைகளை புகுத்துதல் என்பன குறிப்பிடக் கூடிய அம்சங்களாகும். இந் நடவடிக்கையின் பயனாக ஆங்கில மொழி மூலம் போதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கும் •அரசாங்கப் பாடசாலைகளுக்கும் இடை வெளி குறைக்கப்பட்டன எனலாம்.

எனவே கல்வி முறையில் திட்டமிடுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்த கட்டுப் பாடும் ஒருமைப்பாடின்மையும் 1960ஆம் ஆண்டில் பாடசாலைகள் அனைத்தும் தேசிய மயமாக்கியதும் நீக்கப்பட்டன. அரசின் இந்த நடவடிக்கை காரணமாக இலங்கையின் கல்வி அமைப்பு விரிவு பெறலாயிற்று. அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதும் செலவு முன்னைய காலப்பகுதிகளை விடப் பல மடங்காக அதிகரித்தது. என்பதும் குறிப்பிடத்தக்கது.1915 ஆம் ஆண்டில் கல்விக்கான செலவு இருபது இலட்சத்துக்கு மேலாக காணப்பட்டது.

இந் நாட்டு வருமானத்தின் 4.1 சதவீதமாகும். இக் கூடிய செலவீடு பெரும்பாலும் ஆங்கில மொழிப் பாடசாலைகளுக்கே பயன்படுத்தப்பட்டது. 1920ஆம் ஆண்டளவில் அரசாங்கம் கல்வி பற்றி ஒரு புதிய நிதிப்பூட்கையை கையாளத் தொடங்கியதும் கல்வித் துறையின் முழுச் செலவும் நாற்பது இலட்சத்துக்கு மேல் அதிகரித்தது. ஆனாலும் இந்த நடவடிக்கையும் ஆங்கில மெழிப் பாடசாலைகளுக்கே சாா்பாக அமைந்தது. அவர்கள் சுயமொழிப்பாடசாலை மாணவர்களுக்குச் செலவிடும் பணத்திலும் நான்கு மடங்கு ஆங்கில மொழிப் பாடசாலை மாணவர்களுக்கு செலவிட்டனர். 1930ஆம் ஆண்டளவில் அரசின் செலவு ஒரு கோடியே பத்து இலட்சமாக இருந்தது. இச் செலவு 1920ஆம் ஆண்டின் செலவான பணத்தின் மூன்று மடங்காகும். நாட்டின் இலவசக் கல்வி முறை கொண்டு வருவதற்கு முன்னரே 1944ஆம் ஆண்டில் இச் செலவு மூன்று கோடியே ஐம்பது இலட்சமாகும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் கல்வி பயில விரும்பியோா் தொகை அதிகரித்தமையும் கல்வி வசதிகள் விரிவடைந்தமையும் கல்விச் செலவைப் பெரிதும் அதிகரிக்கச் செய்தன. அரசின் சிங்களம் மட்டும் அரச கரும மொழிச்சட்டம், போதனா மொழி மாற்றம், பாடசாலைசுவீகரிப்பு போன்ற நடவடிக்கைளைத் தெடா்ந்து இலங்கையில் இடநிலைக் கல்வியில் பெரிய அளவிலான வளா்ச்சி ஏற்பட்டது. எனவே 1950ஆம் ஆண்டளவில் கல்விச் செலவு 10 கோடியே 60 இலட்சமாக அதிகரித்து.

1960ஆம் ஆண்டில் பாடசாலைகளை அரசாங்கம்கையேற்கவே இந்தத் தொகை இன்னும் மும்மடங்காக அதிகரித்தது எனவே ஐம்பது ஆண்டுகளுக்குள் அரசினா் வருமானத்திற்கு கல்வி வளர்ச்சிக்கான செலவு நான்கு சதவீதத்தில் இருந்து இருபது சதவீதமாகக் கூடியிருக்கின்றது[31] எனவே இலவசக்கல்வி முறை,தாய்மொழி போதனாமொழியாக்கப்பட்டமை என்பன காரணமாக கல்வியைப் பயிலும் மாணவர்கள் தொகை காலப்போக்கில் வளர்ச்சி அடைய அதற்கேற்ப அரசின் கல்விக்கான செலவு அதிகரித்துக் கொண்டே சென்றமையை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் கல்வி மாற்றம் பற்றி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மதச்சார்புடைய கல்வி நிறுவனங்கள் யாவும் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்த போதும், இதற்கு அப்பாலும் தனியாக இயங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்ட பாடசாலைகளே பின்னர் தனியார் பாடசாலைகளாக மாறின. இப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு பெருந்தொகையான கட்டணம் செலுத்த வேண்டிய நிலை காணப்பட்டது. ஆதலால் பொருளாதார வளமுள்ளவர்களுக்கே உரியதாகக் காணப்பட்டது. எனவே தனியார் பாடசாலைகள்,மேன்னிலை மக்கள் ஒரு சிலருக்கே கல்விச்சலுகை வழங்கியது எனலாம்.

காலப்போக்கில் இப் பாடசாலைகள் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டதுடன், இப் பாடசாலைகளிற் கல்விபயிலும் மாணவர்கள் பொதுத்தகுதிப் பத்திரப் பரீட்சை போன்ற கல்விப்பகுதியினரால் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைகளுக்கு தோற்ற வேண்டும் அத்துடன் அப்பாடசாலைகள் கல்வி சம்பந்தமாக ஏனைய அரசாங்கப் பாடசாலைகள் பின் பற்றும் கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

1962ஆம் ஆண்டில் பிரச்சனைகளை ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வெனக் தேசியகல்வி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழு பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வித்துறை பேராசிரியரான ஜே.ஈ.ஜயசூரிய தலைமையில் நியமிக்கப்பட்டது. தேசிய ஆணைக்குழுவின் இடைக் கால அறிக்கையில் பின்வரும் சிபாரிசுகள் இடம் பெற்றிருந்தன.

1. 5-11 வயது வரையுள்ள சகல பிள்ளைகளும் பாடசாலைக்கு அனுப்பப்படவேண்டும் எனப் பெற்றோர்களை வற்புறுத்தும் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

2. ஐந்து வயதின் பின் பெற்றோர்களின் விருப்பப்படி பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்கலாம் அதற்கு முன் எவருடைய பிள்ளைகளையும் எக்காரணம் கொண்டும் சேர்க்கக் கூடாது.

3. இலங்கைப் பிரஜைகட்குப் போதனா மொழி சிங்களமும் தமிழுமாக இருக்க வேண்டுமெனவும் சிபாரிசு செய்யப்பட்டது.

எனவே 1961ஆம் ஆண்டு கல்விக் குழுவின் வெள்ளை அறிக்கையில் கட்டாயக் கல்வி நடவடிக்கைகள், போதனா மொழிக் கொள்கை பற்றிய சிபாரிசுகள் சிறப்பான அம்சங்களாகும் இவர்களுடைய பிரேரணையின் படி பாடசாலைகள் கனிட்டவித்தியாலயம், சிரேஷ்ட வித்தியாலயம் என இரு வகையாகப் பிரிக்கப்பட்டு, கனிட்ட வித்தியாலயத்தில் 14 வயது வரை கல்வியைத் தொடர இட மளிக்கப்பட்டது. கனிட்ட வித்தியாலயம் கீழ்பிரிவு (1-5 வகுப்புக்கள்), மேற்பிரிவு (6-8 வகுப்புக்கள்) என இரு வகைப்படும் மேற்பிரிவில் கல்வியைப் பூர்த்தி செய்தபின் சிரேஷ்ட வித்தியாலயத்திற்கு தெரிவு செய்யப்படலாம்.

அல்லது தொழிற் பயிற்சிக்கு செல்லலாம் அல்லது பாடசாலையை விட்டு விலகலாம். சிரேஷ்ட பாடசாலைகள் 4 வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன அப்பிரிவுகள் பின்வருமாறு. 10

1. விவசாயக் கல்வி
2. பொறிமுறைக் கல்வி
3. விஞ்ஞானக் கல்வி
4. மக்கட் பண்பியலும் வர்த்தகமும்.

கனிட்ட வித்தியாலயங்களில் சித்திய டைந்தவர்களுக்குப் பல துறைகளிலும் பயிற்சியை வழங்குதல் வேண்டும். என்பது இந் நான்கு வகைப்பாடசாலைகளிலும் பிரதான நோக்கமாகும். இவை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இருக்கும் என அரசு எதிர்பார்த்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பாடசாலைகளில் நான்கு ஆண்டு கல்வி பயின்ற பின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றலாம்.போதிய தகைமைகளுடன் இப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் மேலும் 2 ஆண்டுகள் பயின்று க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கு தோற்றலாம் தவறியவர்கள் பாடசாலையிலிருந்து விலக வேண்டும் அல்லது வேறு விசேட கல்விப் பயிற்சிப் பாட சாலைகளில் சேர வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இவ்வாறாகக் கல்விக் கொள் கையில் எற்பட்ட மாற்றங்களின் விளைவாகக் கல்வியில் பங்குபற்றுவோர் வீதமும் அதிக ரித்துச் சென்றது. அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழுவின் சிபாரிசுகள் கல்விக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தியமையைக்காண முடிகின்றது. ஆகவே தொடர்ந்து வரும் காலப்பகுதிகளில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சிக்கு இந் நடவடிக்கைகளே உறுதுணையாக அமைந்தன எனலாம்.

இவ்வாறு காலத்துக்குக் காலம் அரசு மாற்றமடையப் புதிய புதிய கல்விச் சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டன நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்ட போது கல்விக் கொள்கையில் மாற்றங்கள் அரசினால் கொண்டுவரப்பட்டன. 1996ஆம் ஆண்டிலே வெளிவந்த வெள்ளை அறிக்கையின் சிபாரிசுகள் பாடசாலை அமைப்பு முறையிலே மாற்றங்களை ஏற்படுத்தியது. (தொடரும்)

நாகேஸ்வரி விஜயகாந்தன்

## கிராமப்புற அபிவிருத்திக்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

கிராமப்புற அபிவிருத்திக்காக கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் கிராமப்புற அபிவிருத்திக்காக கூடுதலான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொணடு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிராம பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டி யெழுப்ப முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை 2600ஆம் சம்புத்த ஜயந்தி நிகழ்வு வெகுவிமர்சையாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (6-2)

## ராஜபக்ஷ குடும்பத்தில் ஷிராந்திக்கு மட்டுமே மரியாதை அளிக்கின்றேன்

### அனோமா பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தில் ஷிராந்தி ராஜபக்ஷவிற்கு மட்டுமே தாம் மரியாதை அளிப்பதாக சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஷிராந்தி ராஜபக்ஷ தமது பிள்ளைகளுக்கு சிறந்த தாயாக கடமையாற்றி வருகின்றார். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை கைது செய்த சம்பவத்தின் பின்னணியில் மறை கரமொன்று செயற்பட்டு வருவதாகவும் தற்போதைக்கு அது தொடர்பான தகவல்களை வெளியிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக சகல வழிகளிலும் போராடப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி எம்முடன் இணைந்து செயற்பட்டிருந்தால் வலுவான எதிர்க்கட்சியாக குரல்கொடுத்திருக்க முடியும் எனினும் அவ்வாறு நடைபெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியலில் ஈடுபடும் திட்டம் கிடையாது என்ற போதிலும் தேவை ஏற்பட்டால் அரசியலில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (6-2)

## அனுருத்த ரத்வத்தவுக்கு எதிரான ஊழல் மோசடி வழக்கு விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிற்கு எதிரான ஊழல் மோசடி வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் மோசடி தொடர்பான வழக்கு விசாரணைகளில் ஆஜராகுமாறு ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிற்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் தீபாலி விஜேசுந்தர அழைப்பாணை பிறப்பித்துள்ளார்.

வருமானத்தை மீறிய சொத்துக்களை சேர்த்திருப்பதாக அனுருத்த ரத்வத்தை மீது இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் ரத்வத்த குற்றமற்றவர் என முன்னர் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பிற்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழு மீண்டும் மேன்முறையீடு செய்துள்ளது.

1997ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 34 மில்லியன் ரூபா பணமும் ஒரு மில்லியன் பெறுமதியான சொத்துக்களும் சட்ட விரோதமான முறையில் ரத்வத்த திரட்டியிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஜெனரல் அனுருத்த ரத்வத்த மலேசியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படலாம் என இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (6-2)

## தேவையற்ற கட்அவுட்களை அகற்ற ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

தேவையற்ற இடங்களில் காணப்படும் கட்அவுட்களை அகற்றுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தேவையற்ற இடங்களில் தமது கட்அவுட்கள் காணப்படுவதாகவும் அதனை உடனடியாக அகற்றப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவிடம் கோரியுள்ளார்.

சட்டவிரோதமான முறையின் கட்அவுட்கள் காணப்பட்டால் அதற்கான பொறுப்பினை பொலிஸார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# காபன் பண்டமும் காபன் சந்தையும்

(Carbon Commodity and Carbon Market)

இந்நூற்றாண்டிலும் அதன் பின்னரும் உலகம் எதிர்நோக்கப்போகும் மிகப் பெரிய சவால் பயங்கரவாதமோ அல்லது எய்ட்ஸ் நோயோ அல்ல. மாறாக அது புவி வெப்பமடைதலாகவே இருக்கப்போகின்றது எனப் பல சூழலியல் விஞ்ஞானிகள் எதிர்வு கூறி வருகின்றனர்.

இன்றுள்ள நிலையில் இருந்து இன்னும் 3 டிகிரி செல்சியசினால் வெப்பம் அதிகரிக்குமாயின் பூமியும் நாமும் திரும்பி வர முடியாத இடத்திற்குப் போனதற்கு சமன். (We will be at the point of no return)

$Co_2$ என்று அழைக்கப்படும் காபன் வாயுவின் அபரிமிதமான வெளியேற்றம் புவி வெப்பமடைதலை துரிதப்படுத்தும் காரணியாக இருக்கின்றது என அதற்குப் பொறுப்பானவர்கள் மீது சூழலியலாளர்கள் சுண்டு விரலை நீட்டுகின்றனர். இந்த நெருக் கடி நிலையில் இருந்து உலக சமூகத்தினை காப்பாற்றுவதற்கு பலரும் பல விதமான ஆலோசனைகளை கூறிவருகின்றனர்.

கடந்த 30 வருடங்களில் புவி வெப்பமடையும் அளவு கடந்த பல நூற்றாண்டுகளில் இடம்பெறாத அளவு அதி கரித்துச் செல்கின்றது.

காற்று, காடு, காலநிலை என்பன இயற்கையின் நன்கொடை என்பதாகவும் இதற்கு பணப்பெறுமதி (Monalary value) இல்லை என்பது போலவும் $Co_2$ வாயுவினை வெளியேற்றும் தனியார்கள், நிறுவனங்கள் நடந்து கொள்கின்றன.

அதாவது பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இயற்கையின் நன்கொடையான சூழல் பற்றி அதிகம் பிரஸ்தாபித்துக் கொள்ளாததினால் $Co_2$ வாயுவின் வெளியேற்றம் காலநிலை மாற்றத்தினை (Climate Change) ஏற்படுத்தி வருவதினையும் எளிதாக கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை.

உதாரணத்திற்கு ஐக்கிய அமெரிக்க நாடு (U.S.A) புவி வெப்பமடைவதற்கு $Co_2$ வாயுவின் அபரிமிதமான வெளியேற்றம் காரணம் என்பதினை ஏற்கத் தயாரில்லை. இதனாலேயே காபன் வெளியேற்றத்தினை அதிகளவில் மேற்கொள்ளும் நாடுகள் தமது காபன் வெளியேற்றும் அளவினைக் குறைப்பதற்காக ஜப்பானின் கியூட்டே (Kyoto) நகரில் கூட்டப்பட்ட (1997 இல்) '' கியூடோ மாநாட்டில்'' எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு அமெரிக்க அரசு கையெழுத்திடாமல் வெளியில் நின்றது.

காபன் வெளியேற்ற அளவினைக் குறைப்பதற்கும் புவி வெப்பமடைந்து வருதலைக் குறைப்பதற்கும் காலநிலை மாற்றங்கள் புவியின் அழிவிற்குக் காரணமாக இருப்பதினை தடுப்பதற்கு கியூட்டோ மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மானமான காபன் வர்த்தகம் (Carbon Trading) என்பதில் உள்ள காபன் கிறடிட் (Carbon Credit) தீர்மானம் ஒரு வரப்பிரசாதமான பிரேரணையாகும்.

காபன்கிறடிட் உலக நாடுகள் முதலீடு செய்வதின் மூலம் புவியின் வெப்பமடைதலை 30 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலைக்குக் கொண்டு செல்லமுடியும்.

காபன் கிறடிட் எண்ணக்கரு என்பது காபனை அதிகளவில் வெளியேற்றும் நாடுகளிற்கான விழிப்புணர்வு திட்டமாக இருப்பதுடன் சூழல், இயற்கை என்பவற்றிற்கு பணப்பெறுமதியினை வழங்கும் ஒரு நடவடிக்கையாகும்.

$Co_2$ வின் வெளியேற்றத்தினால் மழைக் காடுகள், காடுகள், இயற்கை என்பன மாசடைவதுடன் காலநிலை மாற்றத்திற்கும் காரணமாக அமைகின்றது. கியூடோ, Protocol லின் படி $Co_2$ வெளியேற்றும் அளவு நாடுகளுக்கு தீர்மானிக்கப்பட்டன. அந்த எல்லைகளை அவை தாண்டாமல் இருக்க வேண்டும் . இவ்வெல்லைகள் $Co_2$ வின் வெளியேற்ற அளவினைக் குறைவடையச் செய்யும்.

நாடுகள் தமது எல்லைகளை மீறி $Co_2$ வாயுவினை வெளியேற்றினால் அதற்காக அவர்கள் மீள் காடாக்கம், மரநடுகை அல்லது $Co_2$ வினை உறிஞ்சக்கூடிய மாற்று வழிகளில் ஈடுபடவேண்டும். இதுதான் காபன் கிறடிட் எனப்படுகின்றது.

இன்னுமொரு வகையில் இதனைக் கூறினால் ஏதாவது ஒரு நாடு தனது காபன் வெளியேற்ற அளவு அதன் தீர்மானிக்கப்பட்ட எல்லைகளை தாண்டும் போது அதனால் காபனை உறிஞ்சும் செயல் முறைகளை மேற்கொள்ளமுடியாது விடத்து பிறிதொரு நாட்டிடம் இருந்து காபன் உறிஞ்சலை (absorption ability) விலைக்கு கொள்வனவு செய்ய முடியும். இந்த 'காபன் உறிஞ்சல்' வசதியே காபன் கிறடிட் எனப்படுகின்றது. (This absorption ability is Carbon Credit)

எனவே ஏதாவதொரு நாடு கியூடோ தீர்மானத்திற்கு மேலாக $Co_2$ வாயுவினை வெளியேற்றுமானால் பிறிதொரு நாட்டில் காபனை உறிஞ்சுவதற்கான அதற்கு சமமான மரநடுகை, காடாக்கும் காட்டினை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதற்கான செலவினை அந்நாடுகள் ஏற்றுக்கொள்வதன்மூலம் புவி வெப்பமடைதலை குறைப்பதுடன் மேலதிக $Co_2$ வெளியேற்றத்திற்கான செலவு ஒன்றினைக் கொடுப்பதற்கு தயாராக வேண்டும்.

ஒப்பீட்டளவில் குறைந்த கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் நாடுகள் $Co_2$ வாயு வெளியேற்றம் அதன் எல்லைகளைத் தாண்டாமல் இருப்பதினால் இத்தகைய நாடுகளிடம் காபனை அதிகளவில் வெளியேற்றும் நாடுகள் காபன் கிறடிட் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் புவி வெப்பமடைதலை தணிக்கமுடியும் .

கியூட்டோ தீர்மானங்களின் படி காபன் கிறடிட் என்பது பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. ஒரு காபன்கிறடிட் என்பது ஒரு தொன் $Co_2$ வாயுவுக்கு சமமானது . பணப் பெறுமதியில் ஒரு காபன் கிறடிட் US $10 முதல் $15 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி ஏதாவது ஒரு நாடு காபனை உறிஞ்சுவதில் பற்றாக்குறை ஏற்படுமாயின் மேற்கூறிய உடன்பாட்டின் படி வேறொரு நாட்டில் மரநடுகையில், காடாக்கத்தில் $Co_2$ மேலதிக வெளியேற்ற அளவில் காபன் கிறடிட் முத லீட்டில் ஈடுபட வேண்டும்.

புவி வெப்பமடைதலை தடுப்பதற்கு கியூட்டோ உடன்படிக்கையில் கூறப்பட்ட மேற்படி ஆலோசனைகள் காபன் வர்த்தகம் என்ற புதியதொரு முதலீட்டு நடவடிக்கையாகவும் தோற்றம் பெற்றுள்ளது. எதிர்காலத்தில் ஏனைய வர்த்தகப் பண்டங்களைப் போல் ''காபன் வர்த்தகமும்'' (Carbon trading) முன்னிலை பெறும்.

சூழலியலாளர்கள் புவி வெப்பமடைதலை தணிக்கவும், காலநிலை மாற்றங்களைக் குறைக்கவும் காபன் வர்த்தகமும், காபன் கிறடிட்டும் மிக சிறந்த நடவடிக்கை எனக் கூறுகின்றனர். காபன் வர்த்தகம் ஒழுக்க விதி சார்ந்த ஒரு முதலீடு எனக் கூறுகின்றனர்.

கொப்பனேகனில் கடந்த டிசம்பர் மாதம் நடந்த காலநிலை மாற்றம் குறித்த உலக மாநாட்டிலும் மக்கள் எதிர்பார்த்த எந்த முடிவும் எட்டப்படவில்லை. 119 நாடுகள் கலந்து கொண்ட மாநாட்டில் எதுவித தீர்க்கமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் கியூட் டோ உடன்படிக்கை மூலம் ஏற்கப்பட்ட ''காபன் கிறடிட்'' எண்ணக்கரு 'புவி' சமைக்கப்படுவதில் இருந்து காப்பாற்றுவதற் கான கையில் இருக்கும் ஒரு வழியாகும்.

காபன் கிறடிட் எண்ணக்கரு செயற்படத் தொடங்கினால் கைத்தொழில் புரட்சிக்கு முன் இருந்த வெப்பநிலை அளவுக்கு புவியின் வெப்பத்தினைக் கொண்டு செல்வதுடன் தற்போதைய அதிகரிப்பினை $2^0C$ மேற்படாமல் பாதுகாக்கவும் முடியும்.

வருடம் தோறும் 34 மில்லியன் ஏக்கர் தாவரங்கள் வெட்டப்படுவதும் அழிக்கப்படுவதும் புவி 20% முதல் 25% வரை காரணமாக இருக்கின்றது எனக் கூறுகின்றனர். எனவே காடாக்கம் காபன் வெளியேற்றத்தினைக் குறைக்கும். கியூட்டோ உடன்பாட்டின் படி சர்வதேச காஸ் வெளியேற்ற வர்த்தக விதிகளின் படி (International Emissions trading) (IET) நாடுகள் காபன் கிறடிட் வர்த்தகத்தில் ஈடுபட முடியும்.

இதற்கு ஒரு வளர்ச்சியடைந்த நாடு வளர்ச்சியடைந்து வரும் நாடு ஒன்றில் பச்சை வீட்டுவாயுவினை (Green house Gas) குறைந்தளவில் பேணுவதற்காக காபன் கிறடிட் திட்டமூலம் அந்நாட்டில் முதலீடு செய்ய முடியும். இதன்மூலம் காபனை மேலதிகமாக வெளியேற்றும் நாடு காபனை குறைந்தளவில் வெளியேற்றும் நாட்டில் காடாக்கம், மீள்நடுகை போன்றவற் றில் முதலீடு செய்து கொள்வதின் மூலம் வாயு வெளியேற்றத்தின் சமநிலையை உண்டு பண்ண முடியும்.

இதற்காக வறிய நாடுகளுக்கு கடன், முதலீடு, Sponser போன்றனவற்றை காபன் கிறடிட் திட்டத்தில் வழங்க முடியும். இதனை Clean development mechanism எனவும் கூறுவர்.

உலக நாடுகள் யாவும் படிப்படியாக இக்காபன் செயற்றிட்டத்தினை நடைமுறைப் படுத்தும் போது உலகின் மிகப்பெரிய பண்டச் சந்தையாக காபன் வர்த்தகம் எதிர்காலத்தில் விளங்கும். சமூகப் பொறுப்புள்ள முதலீடுகள் (Social responsible investments) பற்றி இன்று முதலீட்டு நடவடிக்கைகளில் ஒழுக்கவியலாகக் கதைக்கப்படும் விடயம் காபன் வர்த்தகத்திற்கு பொருந்தக்கூடிய கோட்பாடாகக் காணப்படுகின்றது.

கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கம்பனிகள் தமக்கு விதிக்கப்பட்ட காபன் வெளியேற்ற அளவுக்கு குறைந்த மட்டத்தில் வெளியேற்றினால் எஞ்சியதினை (Excess Carbon) வேறு கம்பனிக்கு காபன் கடனாக விற்கமுடியும். அதுபோல காபன் வெளியேற்றத்தினை தனது எல்லைக்கு அப்பால் வெளியேற்றினால் அதற்கான தண்டனையாக காபனை கொள்வனவு செய்யும் முதலீட்டில் ஈடுபட வேண்டும். இவ்வாறு செய்யும்போது காபன் வர்த்தகம் (வாயு வெளியேற்றம் சமநிலைக்கு கொண்டு வரமுடியும்).

காபன் வர்த்தக சந்தையில் போதியளவான காபன் கிறடிட் காணப்படுகின்றது. 2008க்கும் 2012 க்கும் இடைப்பட்ட காலத்தில் தீர்மானிக்கப்பட்ட எல்லைகளை காபன் வர்த்தகம் இன்னும் எட்டவில்லை. இனி வரும் காலங்களில் காபன் விலைகளும் அதிகரிக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

சூழலியல் விஞ்ஞானிகள் காடுகள் பில்லியன், ரில்லியன் டொலர் பெறுமதியானவை என்கின்றனர். அவற்றினை பொருளாதார பண்டமாக மாற்றும் போதே அவற்றின் பணப் பெறுமதி கருத்தில் எடுக்கப்படும். இதற்கான புதிய பண்டமாக, புதிய சந்தை வாய்ப்பாக காபன் வர்த்தகமும் காபன் கிறடிட் திட்டமும் விளங்கும். காபன் முதலீடும் காபன் கிறடிட்டும் உள்ளூர் அரசாங்கங்களை, வாயு வெளியேற்ற அளவினை ஒழுங்குபடுத்தும் (regulate their countries emmission) ஒன்றாகவும் அமையும். இலங்கை அரசானது காபன் வர்த்தகத்தில் அது ஆரம்ப நிலையிலேயே காணப்படுகின்றது. உலகில் காபன் வர்த் தகத்தில் 1000க்கும் மேற்பட்ட திட்டங்கள் Clean development mechanism என்ற (CDM) பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இதில் 5 திட்டங்கள் மட்டும் இலங்கைக் குரியதாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் கைவிடப்பட்ட அல்லது பயன்படுத்தமுடியாது (degraded) கைவிடப்பட்ட காணிகள் 2.0 மில்லியன் ஹெக்டர் அளவுக்கு காணப்படுகின்றது. இக்காணிகள் CDM செயற்திட்டத்தின் மூலம் காடாக்கம், மரநடுகை (afforestation) என்பனவற்றினை காபன் கிறடிட் திட்டத்தின் மூலம் மேற்கொள்ள முடியும். இதற்கான சந்தை வாய்ப்புக்கள் பற்றி காட்டுத் திணைக்களம் ரபர்நடுகை சுவட்டுத்தாபனம் பிரதேச மரநடுகை தாபனங்கள் அறிவுறுத்தப்படல் வேண்டும்.

அபிவிருத்தியடைந்த பணக்கார நாடுகள் காபன் வர்த்தகத்தினையும் காபன் கிறடிட் திட்டத்தினையும் வரவேற்றுள்ளனர். காபன் கிறடிட் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட காபன் வெளியேற்ற அளவின் எல்லைகளை தாண்டும் கைத்தொழில் மயமான பணக்கார நாடுகள் அதற்கான பிரதியீடாக நிர்ணயிக்கப்பட்ட காபன் வெளியேற்ற அளவின் எல்லைகளைத் தாண்டும் கைத்தொழில்மயமான பணக்கார நாடுகள் அதற்கான பிரதியீடாக நிர்ணயிக்கப்பட்ட காபன் அளவின் எல்லைகளை தாண்டாத கைத்



ஏ.சி.ஜோர்ஜ்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

தொழில் மயமாகி வரும் ஏழை நாடுகளின் காடாக்க மரநடுகைத் திட்டங்களில் காபன் கிறடிட் ஊடாக முதலீடு செய்வதின் மூலம் ஏழை நாடுகளை ஏழை நாடுகளாகவும் பணக்கார நாடுகளை அவை புவி வெப்பமடைதலை தூண்டும் வாயுகளை எல்லைகளைத் தாண்டி உற்பத்தியில் ஈடுபடவுமான புதிய வடிவிலான நவகாலனித்துவ வாதம் தான் காபன் கிறடிட் திட்ம் என வறிய நாடுகளின் சூழலியாளர்கள் அரசியல் தலைவர்கள் காபன் கிறடிட் திட்டத்தினை வர்ணிக்கின்றனர்.

மீண்டும் புதிய பாணியில் மேலைத்தேய கைத்தொழில் மய நாடுகள் குறைவிருத்திப் பொருளாதார நாடுகளில் காலனித்துவ வாதத்தினை காபன் வர்த்தகமூடாக மேற்கொள்ள முயற்சிக்கின்றனர் என குற்றம் சுமத்துகின்றனர்.

''நாங்கள் எந்த அளவு காபனையும் வெளியேற்றுவோம்'' நீங்கள் வெளியேற்றாத காபனுக்காக நாங்கள் முதலீடுகளை (காபன் கிறடிட்) மேற்கொள்ளுவோம் என்பதான தீர்மானமாக இது இருக்கின்றது என சில இடதுசாரி அரசியல்தலைவர்கள் கூறுகின்றனர்.

புவிவெப்பமடைந்து வருதல் கண்கூடு. உண்மை, உயிரினம் வாழ்வதற்கான வாழ்ந்து வருவதற்கான தற்போது அறியப்பட்ட நிலையில் புவிக் கோளம் மட்டுமே உள்ளது. புவி வெப்பமடைந்து வருதலை தடுக்காது விடின் புவித்தாய்க்கு மரணவோலையினை புவி வெப்பமடைதல் எழுதிவிடும். ✠

# ஆஸியில் வெளிநாட்டு மாணவர் கற்கும் 37 பாடசாலைகளுக்கு திடீர் மூடுவிழா

அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டு மாணவர்கள் பயின்று வந்த 37 பாடசாலைகள் திடீரென மூடப்பட்டுள்ளன. இதனால், அதில் பயின்று வந்த 5ஆயிரம் இந்திய மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

இந்தியர்களின் மீதான நிறவெறி தாக்குதலைத் தொடர்ந்து, வெளிநாட்டவருக்கு விசா மற்றும் குடியுரிமை வழங்குவதற்கான விதிகளை, அவுஸ்திரேலிய அரசு கடுமையாக்கியுள்ளது.

இதன்படி அவுஸ்திரேலியாவின் குடியுரிமை பெறுவதற்கு அந்நாட்டைச் சேர்ந்தவரின் உறவினராக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த நாட்டின் அரசு நடத்தும் ஆங்கில அறிவுத்திறன் தேர்வில் தேர்ச்சிபெற வேண்டும் என்று புதிய விதிகள் அமுல்ப்படுத்தப்பட்டன.

இதனால், அங்கு வேலை செய்துவரும் இந்தியாவைச் சேர்ந்த தோட்ட வேலை செய்பவர்கள், சமையல் கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், வடிவமைப்பாளர்கள், முடி திருத்துபவர்கள் மற்றும் தாதிகள் ஆகியோர் வேலை இழக்கும் அபாயத்தில் உள்ளனர்.

மேலும் இந் தியாவில் இருந்து ஆண்டு தோறும் ஒரு இலட்சம் மாணவர்கள் அவுஸ்திரேலியாவிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்க செல்கின்றனர். இதில் பெரும் பாலானோர் வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்நிலையில், அவுஸ்திரேலிய அரசின் புதிய விதிகளால் அங்கு பயின்று வரும் வெளிநாட்டு மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் கூறியாகியுள்ளது. மேலும், வெளிநாட்டு மாணவர்கள் பயின்று வந்த 37 பள்ளிகள் திடீரென மூடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக லோக்சபாவில் மத்திய வெளிநாடு வாழ் இந்தியர் நல விவகாரத் துறை அமைச்சர் வயலார் ரவி கூறுகையில், அவுஸ்திரேலிய பாடசாலை கல்லூரிகளில் பயிலும் வெளிநாட்டவருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த வேலை வாய்ப்பு முன்னுரிமைகளை, அந்நாட்டு அரசு கணிசமாகக் குறைத்துள்ளது. இதன் காரணமாக வெளிநாட்டு மாணவர்கள், அங்கு வேலை வாய்ப்புப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் எதிரொலியாக வெளிநாட்டவர் பயின்று வந்த 37 பாடசாலைகள் திடீரென மூடப்பட்டுள்ளன. அதில் பயின்று வந்த 5 ஆயிரம் இந்திய மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளதாக வயலார் ரவி கூறினார். (6-2)

# வெள்ளப் பாதிப்பில் வடகொரியா உணவுப்பஞ்சம் ஏற்படும் அபாயம்

சீனாவையொட்டிய வடகொரிய பகுதியில் பெய்த பலத்த மழையால், கடுமையான வெள்ளம் ஏற்பட்டுள்ளது.சீனாவின் டேன்டாங் பகுதியில் பெய்த பலத்த மழையால், ஒரு இலட் சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சீனாவையொட்டி வடகொரியாவின் ஷினுய்ஜி பகுதியில் ஆற்றில் பெருக்கெடுத்த வெள்ளம், ஊருக்குள் புகுந்துள்ளது. இதை யொட்டி, ஐந்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

விளை நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. தகவல் தொடர்பு துண்டிக்கப் பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடும்படி வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங் இல் இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் வடகொரியாவுக்கு, பல்வேறு உலக நாடுகள் பொருளாதார தடை விதித்துள்ளன. இதனால், தற்போது வடகொரியாவிடம் போதுமான உணவு கிடையாது.


எனவே, உணவுத்தட்டுப்பாட்டால் மக்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.(6-2)

# ஈரான் தாக்கப்பட்டால் பதிலடி உலகளவில் இருக்கும்

## அந்நாட்டு ஜனாதிபதி எச்சரிக்கை

அணுசக்தி பிரச்சினையில் ஈரான் தாக்கப்பட்டால், அதற்கான பதிலடி உலக அளவில் இருக்கும் என்று ஈரான் ஜனாதிபதி அகமட் நிஜாத் எச்சரித்துள்ளார். இது குறித்து கட்டார் நாட்டு பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில்,

ஈரான் தாக்கப்பட்டால் அதற்கான பதிலடி கொடுக்க எங்களுக்கு இருக்கும் வழி முறைகளுக்கு எல்லையே இல்லை உலக அளவில் பதிலடி கொடுப்போம். நாங்கள் அணு ஆயுதங்களை தயாரிக்க மாட்டோம் என்று தொடக்கம் முதல் கூறி வருகிறோம் எங்கள் திட்டம் எல்லாம் மின்சார உறப்பத்திக்காக அணு சக்தியை பயன்படுத்துவது தான் இஸ்ரேலுடன் நெருக்கமாக உள்ள சில நாடுகள் ஈரான் மீது தாக்குதல் நடத்த யோசித்து வருகிறார்கள்.



ஆனால், அவர்களின் முதலாளியான அமெரிக்கா அவர்களை ஈரானை தாக்க அனுமதிக்காது என்று நம்புகிறேன் அப்படித் தாக்கினால் ஈரானின் பதிலடி கடுமையாக வேதனையானதாகவும் இருக்கும் என அகமதினிஜாத் கூறினார். (6-2)

# நடிகர் ஏ.கே.வீராசாமி காலமானார்

(சென்னை)

தென்னிந்திய நடிகர் சங்க முன்னாள் துணைத் தலைவரும் நடிகருமான ஏ.கே. வீராசாமி வயது (84) சென்னையில் நேற்று முன்தினம் காலமானார்.

இவர் உன்னைப் போல் ஒருவன் (பழைய படம்) படத்தில் நடித்ததற்காக தேசிய விருது பெற்றவர் ஆவார். எம்.ஜி.ஆருடன் பணம் படைத்தவன், சிவாஜி கணேசனுடன் முதல் மரியாதை, கமலுடன் வசூல்ராஜா எம். பி. பி.எஸ். உள்ளிட்ட நூற்றுக்கணக்கான படங்களில் நடித்தார். கடந்த சில மாதங்களாக உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வந்த ஏ.கே. வீராசாமி ராயப்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் காலமானார்.

இவருக்கு 4 மகன்களும் ஒரு மகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

# விமானத்தாக்குதல் கண்ணிவெடிகளில் சிக்கி பாகிஸ்தானில் 10 பேர் பலி

(பெஷாவர்)

தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கருதப்படும் பாகிஸ்தானின் வடமேற்கு பழங்குடிகள் பகுதியில் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் நடத்திய தாக்குதலில் 6 தீவிரவாதிகளும் தீவிரவாதிகள் வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி 5 பேரும் கடந்த 21ஆம் திகதி கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக சந்தேகிக்கப்படும் குதுப் கேல் பகுதியில் ஆளில்லா விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன. இது ஒரு கட்டடம் மீதும் வாகனம் மீதும் விழுந்து வெடித்தது இதில் 6 தீவிரவாதிகள் அங்கேயே இறந்தனர். ரம்ழான் முடிந்து இப்தார் விருந்து நடக்கவிருந்த சமயத்தில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

இதனிடையே முகமந்த ஏஜென்சி பகுதியில் வீதியில் புதைத்துவத்திருந்த கண்ணிவெடிகள் வெடித்த போது அதில் சிக்கிய வாகனம் சிதறி அதில் பயணம் செய்த பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் மற்றும் தலிபான் எதிர்ப்பு அமைதிக்குழுவை சேர்ந்த 4 பேர் உட்பட 5 பேர் பலியானார்கள் வழக்கமான ரோந்துப் பணியின் போது இவர்கள் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தனர் என அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன. (6-2)



முதன் முறையாக ஈரான் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நெடுந்தொலைவு சென்று தாக்கும் ஆளில்லா போர் விமானத்தின் சோதனை ஓட்டம் ஒரு ரகசிய இடத்தில் நடந்தது. இது எதிரிகளை அழிக்கும் தூதர் என அதிபர் முகமட் அகமட்நிஜாத் தெரிவித்துள்ளார்.

# கற்பழிப்பு புகாரின் பின்னணியில் அமெரிக்கா இருக்கலாம்

## விக்கிலீக்ஸ் இணைய தள நிறுவுனர் குற்றச்சாட்டு

தன்மீது சுமத்தப்பட்ட கற்பழிப்பு புகாரின் பின்னணியில் அமேரிக்க இராணுவ அமைப்பான பெடகன் இருக்கலாம் என விக்கி லீக்ஸ் இணைய தளத்தின் நிறுவனர் ஜுலியன் அசேன்ஜ் தெரிவித்துள்ளார்.

சுவீடனில் வாழும் அவுஸ்திரேலிய நாட்டவரான ஜுலியன் அசேன்ஜ்(வயது39) விக்கி லீக்ஸ் என்ற இணைய தளத்தை தொடக்கி நடத்தி வருகிறார்.

ஆப்கான் போர் தொடர்பாக அமெரிக்காவுக்கு எதிராக சில சர்ச்சைக்குரிய ஆவணங்களை அசேன்ஜ் தனது இணைய தளத்தில் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந் நிலையில் அவர் மீது ஒரு கற்பழிப்பு புகார் கூறப்பட்டது. அவரை கைது செய்ய பிடி ஆணை பிறப்பித்து கடந்த 21 ஆம் திகதி ஸ்வீடன் பொலிஸார் உத்தரவிட்டனர்.

ஆனால் சில மணி நேரங்களிலேயே பொலிஸ் தனது கைது பிடி ஆணையை திரும்பப் பெற்றுக் கொண்டது.

இது குறித்து நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த ஜுலியன் அசேன்ஜ் சுவீடன் பொலிஸார் எனக்கு எதிராக கைது பிடி ஆணை பிறப்பித்து அதை உடனே வாபஸ் பெற்றுள்ளது.

இந்தச் செயலுக்கு பின்னணியில் யார் இருக்கிறார்கள் என தெரியவில்லை. அமெரிக்க இராணுவ அமைப்பான பென்டகன் இருக்கலாம் என சந்தேகிக்கிறேன்.

ஏற்கனவே அவர்கள் என்னை மிரட்டி இருந்தார்கள். அமெரிக்காதான் இது போன்ற கீழ்த்தரமான தந்திரங்களைப் பயன் படுத்தும் என்று தெரிவித்தார். (6-2)

# அவுஸ்திரேலியாவில் கூட்டணி ஆட்சி அமைக்கப்படவுள்ளது

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை வாக்கு கிடைக்காததால் கூட்டணி ஆட்சி அமையவுள்ளது. அவுஸ்திரேலியாவில் கடந்த 21 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. 150 இடங்களுக்கான தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி 72 இடங்க ளையும் எதிர்க்கட்சியான கன்சர்வேடிங் கூட்டணி 73 இடங்களையும் மற்றும் சுயேட்சைகள் நான்கு இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆட்சியைப் பிடிக்க 76 இடங்கள் தேவை எந்த கட்சிக்கும் இந்த அளவுக்கு இடங்கள் கிடைக்காததால் ஆளுங்கட்சி சுயேட்சைகளின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சி அமைக்க முயற்சிக்கிறது.

இதேபோல எதிர்க்கட்சி கூட்டணியும் சுயேட்சைகளின் ஆதரவை நாடியுள்ளன. அவுஸ்திரேலியாவின் முதல் பெண் பிரதமர் ஜுலியா கிலாற்டு தங்கள் கட்சி பிரமுகர்களுடன் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார். கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் டோனி அபோட்டும் கூட்டணிதலைவர்களுடன் விவாதித்து வருகிறார்.

இன்னும் ஒரு சில தொகுதிகளில் வாக்கு எண்ணும் நிலை முழுமையாக முடியவில்லை வாக்குகள் முழுவதும் எண்ணி முடிக்கப்பட்ட உடன் தேர்தல் முடிவுகள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். (6-2)

ஏழைகள் உணவைத் தேடுகிறார்கள்;
பணக்காரர்கள் பசியைத் தேடுகிறார்கள்.
~ இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# புனர்வாழ்வு பெற்ற முப்பது பேரை பெற்றோரிடம் ஒப்படைக்க ஏற்பாடு

(கொழும்பு)

புனர்வாழ்வு முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் 30 பேரை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவர்களது குடும்பத்தாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக புனர்வாழ்வு நிலையங்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தெரிவித்தார்.

இம்முறை ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளுடைய தாய்மார் மற்றும் சுகவீனமுற்ற 30 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் ஆணையாளர் கூறினார்.

மோதல்களின் போது புலி உறுப்பினர்களுடன் தொடர்புடையவர்கள் சரணடையுமாறு இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதற்கு அமைய சரணடைந்த பல்வேறு வயதிற்குட்பட்டவர்கள் வெவ்வேறு புனர்வாழ்வு நிலையங்களின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கான விசாரணைகள் முடிபடைந்த பின்னர் வயதெல்லை அடிப்படையில் இவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றனர்.

அந்தவகையில், புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து இதுவரையில் 3 ஆயிரத்து 80 முன்னாள் புலி உறுப்பினர்கள் தமக்குரிய விசாரணைகள் முடிபடைந்ததையடுத்து பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளையுடைய தாய்மார் மற்றும் கடும் சுகவீனமுற்ற 30 பேரே அடுத்த கட்டமாக விடுவிக்கப்படவிருப்பதாகவும் ஆணையாளர் கூறினார். (ச-5)

# தென்பகுதி திரண்டு வருகிறது நாங்கள் எங்கு போவோம்!

யாழ்ப்பாண நகரத்திற்குள் போவதற்கு இப்போதெல்லாம் மனமே வருவதில்லை. அந்தளவிற்கு சனநெருசல். ஏன்தான் இப்படியென்று மனத்தால் நினைப்பதற்கும் முடியாமல் உள்ளது.

ஒருவர் தான் விரும்புகின்ற இடத்திற்குச் செல்வது அவரின் சுதந்திரம் என்பதில் மறு கருத்திற்கு இடமில்லை. அதேநேரம் ஒருவரின் சுதந்திரம் மற்றவரின் சுதந்திரத்திற்கு குந்தகமாக அமைந்துவிடக் கூடாது என்பது மிகவும் முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணத்திற்கு தென்பகுதியிலிருந்து வரும் மக்கள் தொகையைப் பார்க்கும்போது மக்கள் படையெடுப்பு நடைபெறுவது போலத் தோன்றும். அந்தளவிற்கு தென்பகுதி மக்களின் யாழ்ப்பாண விஜயம் அமைந்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இன்னமும் கட்டியெழுப்பப்படவில்லை. உடைந்த கட்டடங்கள், பல வருடங்களாக திருத்தப்படாத வீதிகள், போதிய மலசலகூடமின்மை என்ற நிலையில்,

நாள் தோறும் பல்லாயிரக் கணக்கில் மக்களும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் யாழ்ப்பாண நகரை ஆக்கிரமிக்கும் போது அதனால் ஏற்படும் பாதிப்புகள் யாழ்ப்பாண மக்களுக்கென்பது உணரப்பட வேண்டும்.

யுத்தத்தால் சிதைந்து போன யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்பட்ட பின்னர்-தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போவார்களாயின், அவர்களின் வரவினால் எந்தவிதமான இட்டல் இடைஞ்சல்களும் ஏற்படமாட்டா.

மாறாக சிதைந்து போயிருக்கும் யாழ்ப்பாணத்தை நோக்கி இலட்சக்கணக்கில் தென்பகுதி மக்கள் படையெடுப்பார்களாயின் அதனால் யாழ். குடாநாட்டு மக்களின் இயல்பு நிலை மிக மோசமாகப் பாதிப்படையும்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தையும் தீவகத்தையும் இணைக்கும் பண்ணை வீதியால் பயணிக்க வேண்டியிருந்தது.

குன்றும்குழியுமாக இருக்கும் பண்ணை வீதியால் வாகன நெரிசல் இல்லாமல் பயணிப்பதென்பதே முடியாத காரியம். நிலைமை இதுவாக இருக்கையில் தற்போது தென்பகுதி வாகனங்கள் பண்ணை வீதியை முழுமையாக ஆக்கிரமித்துள்ளதால் அந்த வீதியில் பயணிப்பது முடியாத காரியமாயிற்று.

வெறுமையாகக் கிடந்த பண்ணை வீதியில் இப்படியொரு வாகன நெரிசலா என்ற ஆச்சரியத்திற்கப்பால்;

தீவுப் பகுதியில் நோய் வாய்ப்படும் ஒருவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சிகிச்சையளிக்க வேண்டிய தேவை இருக்குமாயின் அது சாத்தியப்படாத விடயம் என்பதை பண்ணை வீதியில் நிலவும் வாகன நெரிசல் உணர்த்தி நிற்கின்றது.

நயினாதீவு உள்ளிட்ட தீவகத்தின் பிரதேசங்களை பார்வையிடுவதில் தென் பகுதி மக்கள் காட்டும் அதீத விருப்புக் கூட தீவகத்து மக்களுக்கு ஆபத்தாக அமைவது துரதிர்ஷ்டமே.

எதுவாயினும் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் மற்றும் இராணுவத் தரப்புகள் நிலைமையை உணர்ந்து தென்பகுதி மக்களின் யாழ். வருகையை மட்டுப்படுத்தத் தவறுவார்களாயின்,

வருகின்ற மாரி காலம் யாழ். குடாநாட்டு மக்களுக்கு தொற்றுநோய்களைத் தாராளமாக வழங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

# இலங்கைக்கு எதிரான சர்வதேச செயலே இந்தியா நேரடியாகத் தலையிடக் காரணம்

## இடதுசாரி விடுதலை முன்னணி கருத்து

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான சர்வதேச நாடுகளின் நிலைப்பாடே இந்தியா மீண்டும் இந்நாட்டுப் பிரச்சினையில் நேரடியாக தலையிடக் காரணமாகும் என்று இடதுசாரி விடுதலை முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவித்தார்.

அத்தோடு தமிழ் மக்களின் அழிவுக்கு இந்தியாவே பொறுப்பேற்க வேண்டும். எனவே அம்மக்களின் துயர்துடைக்கும் தார்மீகக் கடமை இந்தியாவிற்கு உண்டு என்றும் அவர் கூறினார். இது தொடர்பாக சமல் ஜயநித்தி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழ் மக்கள் இன்று சமூக, பொருளாதார மற்றும் வாழ்வாதாரம் இல்லாமல் அனைத்து திசைகளிலும் சீரழிந்து சின்னாபின்னமாக வாழ்கிறார்கள் என்பதை உலகம் உணர்ந்துகொண்டுள்ளது. எனவே இம் மக்களுக்கான நலன்புரிகளை வழங்கவேண்டுமென பல்வேறு விதத்தில் அரசாங்கம் மீது சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை நிறுத்தியுள்ளது. கப்பல் மூலம் கனடா சென்ற அகதிகளுக்கு கனடாவில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் மீதான தனது அதீத கவனத்தை செலுத்த ஆரம்பித்துள்ளது.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் இந்தியாவால் மௌனம் சாதிக்க முடியாது. ஏனெனில் வேறொரு நாடு இலங்கைப் பிரச்சினையில் தலையிடுமோ என்ற அச்சம் இந்தியாவைக் குடிகொண்டுள்ளது. அத்தோடு சீபா இரு தரப்பு வர்த்தக புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதில் இந்தியா அதிக ஆர்வம் காட்டி வருகிறது.

எனவேதான் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முன்னோடியான சிதம்பரத்தை விசேட தூதுவராக இங்கு அனுப்பி வைக்கவுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் காலனித்துவ நாடாக இலங்கை மாறும். இதனை அரசாங்கத்தின் பங்காளிகளான ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி போன்ற இனவாதக் கட்சிகளாலும் தடுக்கமுடியாது என்றார். (ச-5)

# எதிர்க்கட்சித் தலைவராக கரு ஜெயசூரிய?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகளில் மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் உயர்மட்டச் சந்திப்பின்போதே இந்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பின்போது தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கருஜெயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ, ஜோசப் மைக்கல் பெரேரா உட்பட்டோர் பங்கேற்றனர்.

இதன்போது தமக்கு கட்சியின் தலைமைப் பதவியை காட்டிலும் கட்சியின் இரண்டாம் நிலைப் பதவி ஒன்று அவசியம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவராக கரு ஜெயசூரியவை நியமிப்பதற்கும், கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்வதற்கும், சஜித் பிரேமதாஸவுக்கு பிரதித் தலைவர் பதவியை வழங்குவதற்கும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் இறுதி முடிபு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண நான்காவது காலிறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான 4ஆவது கால் இறுதிப்போட்டி வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் கழக அணியினருக்கும், ஜொலிஸ்ரார் கழக அணியினருக்கும் இடையில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. இப் போட்டி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இப் போட்டியில் வெற்றி பெறும் அணி, யாழ். சென்றல், கிறாஸ்கொப்பர் அணிகளுக்கிடையில் நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் அரையிறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

ஏற்கனவே யாழ். பல்கலைக் கழக அணி இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தீர்த்தமாடி எம் குறைகள் தீர்ப்பாய்

சந்நிதியில் வந்துதித்த முருகா-எம்
சந்ததி காத்திடும் மால் மருகா
தேரேறித் தீயதை அழித்தாய்-இன்று
தீர்த்தமாடி எம் தீராத துயர்கள்
தீர்த்து வைக்க வாராய்
காவடியாய் கற்பூரச் சட்டியதாய்-உன்
சேவடியை வணங்கிட நாம் வந்தோம் ஐயா
அன்னதானக் கந்தனாய் அரும்பசி போக்கிடும்
மன்னவனே இன்று உன்னோடு
தீர்த்தமாடிடும் எம் துயர்கள் தீர்ப்பாய்

(சந்நிதி முருகனின் தீர்த்தத் திருவிழா இன்று)

புலோலியூர்
வேல்நந்தன்

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



இந்த உலகம் மாபெரும் பைத்தியக்கார விடுதி. இதில் வாழும் அனைவரும் பைத்தியங்கள். சிலருக்குப் பணத்தின் மீது பித்து. மற்றும் சிலருக்குப் பெண்கள் மீது பித்து. வேறு சிலருக்குப் பெயரிலும் புகழிலும் பித்து. சிலருக்குத்தான் கடவுள் மீது பித்து. நான் கடவுள் பைத்தியமாக இருக்கவே விரும்புகிறேன்.

இறைவனிடம் செலுத்தும் அளவற்ற அன்பே பக்தி ஆகும். அளவற்ற அன்பின் மூலம் ஒருவன் மரணமில்லாப் பெருநிலையை அடைகிறான். இதன் மூலம் அவனுக்கு முழுத்திருப்தி ஏற்படுகிறது. தனக்கு எத்தகைய இழப்பு நேரினும் அது குறித்துஅவன் வருந்துவது இல்லை. பிறர் மீதும் அவன் ஒருபோதும் பொறாமை கொள்வதும் இல்லை. இறைவனை அறிந்த அவன் பித்தனாகி விடுகிறான்.

# உயிர் மூச்சினால் ஏற்படும் சிரமங்கள்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

**மூச்சில் பலவகை உண்டென்கிறார்களே அது உண்மைதானா?**


ஆம். சுவாசித்தலின் அளவு, வேகம், ஆழம்,விகிதம், முறை மற்றும் எளிதாக சுவாசித்தல் ஆகியவற்றைக்கொண்டு மூச்சைப் பல வகைககளாகப் பிரிக்கலாம். அமைதியாக உள்ளபோது உள்ள மூச்சுக்கு இயல்பான மூச்சு என்றும், மூச்சுச் செயற்பாட்டில் , ஆழ்ந்த மூச்சு அதிகமாகி வெளியிடும் மூச்சு விசையுடன் உள்ளதற்குக் கடின மூச்சு அல்லது மூச்சிரைப்பு அல்லது மூச்சு வாங்குதல் என்றும் மூச்சுச் செயற்பாட்டில் விரைவு மட்டும் அதிகமுள்ளதைப் பலமூச்சு என்றும் அளவுக்கு மீறி மூச்சுச் செயற்பாடு நிகழ்த்துகையில் அடிக்கடி உண்டாகும் மூச்சிரைப்பை அசாதாரண மூச்சு என்றும் இவ்வாறு மூச்சிரைப்பு பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.

மேலும் மூச்சுச் செயற்பாடானது தற்காலிகமாக பல இரசாயன மற்றும் நரம்புக் காரணங்களால் மூளையிலுள்ள மூச்சு மையம் தூண்டப்பட்டு அதிகமாதலை Hyperventilation என்றும், நாட்பட நீடித்த அதிகமான மூச்சுச் செயற்பாட்டை Chronic hyperventililation syndrome அல்லது Effort syndrome என்றும் சொல்கின்றோம்.

சில வகையான உடற்கோளாறுகளில் மாறுபட்ட இத்தனை வகை மூச்சுச் செயற்பாடுகள் தனித்தோ அல்லது ஒன்றுடன் ஒன்று கலந்தும் காணப்படலாம். இதைப் பகுத்துணர்ந்து, தற்காலிகச் சிகிச்சை மட்டும் செய்யாமல் நோய்க்கான காரணத்தை அறிந்து முழுச்சிகிச்சை முறைகளை மேற்கொள்ளவேண்டியது ஒரு சிறந்த நல்ல மருத்துவரின் தலையாய கடமையாகும்.

**இப்போது நீங்கள் குறிப்பிட்ட பல மூச்சு வகைகளில் கடின மூச்சு என்னென்ன நோய்கள் வரும்?**

பொதுவாக, நமக்கு உடலுழைப்பு



© 2006 Encyclopædia Britannica, Inc.

அதிகமாகும்போது ஒட்சிசன் தேவையும், கார்பன் டை ஒக்சைட் வெளியேற்ற வேண்டிய கட்டாயமும் அதிகமாகின்றன. ஆழ்ந்தும் வைந்தும் மூச்சுவிடுவதன் மூலம் இது ஈடு செய்யப்படுகின்றது. இவ்வாறு ஆழ்ந்தும் , விரைந்தும் கடினப்பட்டும் மூச்சுவிட அனைத்து மூச்சுத் தசைகளும் மிகுதியாகச் செயல்பட வேண்டியுள்ளன. இவ்வாறு இத் தசைகள் மிகுதியாகச் செயற்பட்டு, சுவாசித்தலின் வேகம் கூடுவதையே பொதுவாக நாம் மூச்சு வாங்குகி றோம் என்கின்றோம்.

உடலுழைப்பு இல்லாத சமயத்திலும் இவ்வாறு மூச்சு வாங்கத் தொடங்குவதே நோயின் அறிகுறியாகும். இதற்கு முக்கியமான மூன்று பெரும் காரணங்களைச் சொல்லலாம்.

♦ மூச்சுப் பாதையினுள் ஏற்படும் தடைகளால் உடலுழைப்பு அதிகமாகி, அதிக மூச்சு வாங்குதல் மற்றும் நுரையீரல்களின் சுருங்கி விரியும் மீள்தன்மை குறைவதுடன் மார்புக்கூடு விரிவதும் தடைப்படுவதால் உண்டாகும் மூச்சுத் திணறல் நோய்கள்.

உதாரணமாக ஆஸ்துமா, நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி நோய், நுரையீரல் விரிவுநோய், மூச்சுக்குழல் அயல் பொருட்களால் அடைத்துக்கொள்ளுதல் போன்ற மூச்சுப்பாதை தடைநோய்கள்.

நுரையீரல் நீர்வீக்க நோய், நுரையீரல் திசுசுருக்கு நோய், காற்று நுண் அறை அலர்ஜி நோய் போன்ற நுரையீரல் மீள் தன்மை குறைநோய்கள் முதுகுத்தண்டு வளைவு அழற்சிநோய் மூச்சுமண்டலத் தசைச் செயலிழப்பை உண்டாக்கும் நோய்கள் மற்றும் முதுகுத்தண்டு முன்பக்க வளைவு நோய் Pectus excavatum போன்ற குழிந்த மார்புக்கூட்டாலும், மார்பு விரிவுத் தடைகளாலும் மூச்சுவாங்குதல் அல்லது மூச்சுத்திணறல் ஏற்படும்.

♦ மூச்சுச் செயற்பாடு அதிகமாவதால் உண்டாகும் மூச்சிரைப்பு நோய்கள் அல்லது மூச்சுத்திணறல் நோய்கள்.

இவ்வகையான மூச்சுத்திணறல் மூச்சை உள் இழுத்து வெளிவிடும் விகிதத்தில் ஏற்படும் மாற்றத்தினால் மூச்சிரைப்பு அதிகமாக தொல்லை தரும். உதாரணமாக நிமோனியா, நுரையீரல் சுருங்குநோய், அதிகப் பருமன் நுரையீரல் உறை அழற்சி நோய் மற்றும் நுரையீரல் இரத்தநாள அடைப்பு நோய் மற்றும்இதயச் செயலிழப்பிலும் இவ்வகையான மூச்சிரைப்பு ஏற்படும்.

♦ முன்பே நான் சொன்னது போல் மூச்சுமையம் பல்வேறு இரசாயன மற்றும் நரம்புக் காரணிகளால் தூண்டப்படும் போது பெருமூச்சு உண்டாகிறது. இது அடிக்கடி அதிகளவில் உணர்ச்சி வசப்படுபவர்கள், பரபரப்புக்குள்ளாவோர், சமூக

டாக்டர் கே.ஏ.மோகன்தாஸ்
சென்னை

உறவுப் பிரச்சினைகளால் உருவாகும் தாங்கமுடியாத சீற்றம், பகைமை, உணர்வு, வெறுப்பு, பாலுணர்வு போன்றவைகளை அடக்கிவைப்போர்கள் ஆகியோருக்கு இப் பெருமூச்சு ,நாட்பட்ட பெருமூச்சு நோயாக உருவெடுக்கிறது.

பயம்,பதற்றநோய்,அச்சநோய், கெட்ட கனவுகளைப் பெறுவோர் போன்ற நரம்புத் தளர்ச்சி நோய்களுக்கு ஆட்படும் பண்பியல் தொகுப்பு உடையவர்களும் குறிப்பாக இளைஞர்கள், இளம் பெண்கள், தாய்மார்கள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனவே மூச்சுத்திணைறலைப் பற்றி இன்னும்நாம்சற்று விரிவாகத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

(முற்றும்)

## Health Care மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

# கொலஸ்ட்ரோல்

இதய நலம் தொடர்பாக முழுமையாக அறிந்துகொள்ள வேண்டும் என்றால், அந்தக் கொலஸ்ட்ரோல் பற்றி இன்னும் விளக்கமாகத் தெரிந்துகொள்வது நல்லது.


கொலஸ்ட்ரோல் என்ற வார்த்தை இன்றைக்கே ஆரோக்கியம் தொடர்பான விவாதங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. நம் நாட்டில் கொலஸ்ட்ரோல் பற்றிய உண்மைகளை விட வதந்திகளே அதிக அளவு பரவியுள்ளன. கொலஸ்ட்ரோலை குறிப்பிட்ட அளவில் சேர்த்துக்கொள்வது உடலுக்குப் பல வகைகளில் நன்மையாக அமையும்.

ஆனால் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக கொலஸ்ட்ரோல் சேர்க்கப்படும் போது தான் உடல் நலத்துக்குக் கேடாக அமைந்து விடுகிறது. கதாநாயகனாகச் செயல்பட்டு நன்மை புரியும் கொலஸ்ட்ரோலானது அளவுக்கு அதிகமான நிலையில் கொடூரமான வில்லனாக மாறி பல தீமைகளை விளைவித்துவிடுகிறது.

**கொலஸ்ட்ரோல் என்றால் என்ன?**

கொலஸ்ட்ரோலல் என்பது கொழுப்பு வகைக் குழுமத்தைச் சார்ந்த மென்மையான மெழுகு போன்ற பொருள். உடல் நலம் காக்கவும் உடலின் சில முக்கியதான பணிகளைச் செய்யவும். நமது உடலே குறிப்பிட்ட அளவு கொலஸ்ட்ரோலை உற்பத்தி செய்து கொள்கிறது.

கொலஸ்ட்ரோல் (CHOLESTROL) என்பது கோலி (STEROL) என்ற இரண்டு கிரேக்கச் சொற்கள் நேர்ந்து உருவான ஒரு




வார்த்தை. கோலி என்ற கிரேக்கச் சொல்லுக்கு பித்த நீர் என்று பொருள். ஸ்ட்ரோல் என்ற சொல்லுக்குக் கெட்டியான பொருள் என்று அர்த்தம். கல்லீரலானது இந்தப் பொருளை உருவாக்குவதால் இதற்கு இப்படி ஒரு பெயர் வழங்கப்பட்டது.

அளவோடு இருந்தால் கொலஸ்ட்ரோல் ஒரு கதாநாயகன் என்று சொன்னேன் இல்லையா, அது ஒன்றும் மிகை அல்ல. கொலஸ்ட்ரோலால் நம் உடலுக்குப் பல நன்மைகள் உண்டு. கொலஸ்ட்ரோலானது ஆண் இன ஹோர்மோனாகிய டெஸ்டோஸ்டீரானையும் (TESTOSTERONE) பெண் இன ஹோர்மானாகிய ஈஸ்ட்ரோஜனையும் உற்பத்தி செய்ய துணைபுரிகிறது.

செல்களில் மென் திசுக்களை உருவாக்க மற்ற கொழுப்புகளுடன் கொலஸ்ட்ரோலும் இணைந்து செயல்படுகிறது. மேலும் மூளை, நரம்பு அமைப்புகள் உருவாகத் துணைபுரிகிறது. முக்கிய உயிர்ச்சத்தான விற்றமின் டி யின் (VITAMIN D) உற்பத்தியைத் தூண்டுகிறது.

இவ்வளவு நல்லவனாக இருக்கும் கொலஸ்ட்ரோல் ஓர் ஆரோக்கியமான மனிதனின் உடலில் எந்த அளவு இருக்க வேண்டும் என்பது நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்.

உடலில் உள்ள 100 மில்லி இரத்தத்தில் 150 மில்லிகிராம் முதல் 200 மில்லிகிராம் அளவு தான் கொலஸ்ட்ரோல் இருக்க வேண்டும். இந்த அளவு அதிகரிக்கும்போது தான் உடல் நலம் சீர்குலைகிறது. 75 கிலோ உள்ள ஓர் ஆரோக்கியமான மனிதனின் உடலில் சுமார் 5அவுன்ஸ் அல்லது 75 முதல் 150 கிராம் அளவுள்ள கொலஸ்ட்ரோல் இருக்கும். மனித மூளையின் மொத்த எடையில் 0.3 சதவீதம் கொலஸ்ட்ரோல் உள்ளது.

சிறுநீரக மேல் சுரப்பிகள், சின்னப்பைகள், விதைப்பைகள் போன்ற உறுப்புகளில் கொலஸ்ட்ராலானது 10 சதவீதம் இரத்தத்தில் இருக்கிறது. கொலஸ்ட்ரோலை அடர்த்தி குறைந்த கொழுப்புப் புரதத்தை தீமை தரும் கொலஸ்ட்ரோல் என்றும், அடர்த்தி மிகுந்த கொழுப்புப் புரதத்தை நன்மை தரும் கொலஸ்ட்ரோல் என்றும் பிரித்துள்ளனர்.

நன்மைதரும் கொலஸ்ட்ரோல் இரத்தக் குழாயில் படியும் தீமை தரும் கொலஸ்ட்ரோலை அகற்றி அவற்றை இரத்தத்தின் மூலம் கல்லீரலுக்கு எடுத்துச் சென்று அழிக்கின்றன. இவ்வாறு இரத்தக் குழாய்களில் குறிப்பாக இதயத் தமனிகளில் படிந்திருக்கும் கொழுப்புப் படிவங்களை அகற்றி, இரத்தக் குழாய்களில் இரத்தமானது தடையில்லாமல் ஓட துணை புரிவதால் அதாவது இரத்தக் குழாய்களைத் தூய்மைப்படுத்தும் சிறப்பான பணியைச் செய்வதால் இவற்றை நன்மை தரும் கொலஸ்ட்ரோல் என்கிறார்கள். இரத்தத்தில் இவ்வகையான கொலஸ்ட்ரோல் அளவு அதிகரிப்பது இதயத்துக்கு மிகவும் நல்லது.


இதற்கு மாறாக இரத்தத்தில் தீமை தரும் கொலஸ்ட்ரோல் அதிகமாவதால் இதயத்துக்குப் பல்வேறு கேடுகள் ஏற்படுகின்றன.

கொழுப்புச் சத்து மிகுந்த உணவு வகைகளைத் தேவைக்கு அதிகமாக தொடர்ந்து அதிக அளவு உட்கொள்வதால் இரத்தத்தில் உள்ள தீமை தரும் கொலஸ்ட்ரோலின் அளவானது அதிகமாகிறது. இதன்காரணமாக அடர்த்தி குறைந்த கொழுப்புப் புரதத்தின் படிவங்கள் காலப் போக்கில் இரத்தக் குழாய்களில் குறிப்பாக இதயத் தமனிகளின் சுவர்களில் சிறிது சிறிதாகப் படிக்கின்றன.

இவற்றை உரிய காலத்தில் தடுக்க வில்லை என்றால் இதயத் தமனிகளின் உள்விட்டம் குறுகிக்கொண்டே வரும். மேலும் இதயத் தமனிகளின் சுருங்கி விரியும் தன்மையும் பாதிக்கப்பட்டு தடித்து விடும்.

இதயத் தமனிகளின் உள்விட்டமானது இப்படி பல வகைகளில் குறுகுவதால் இதயத் தமனிகளில் ஓடும் இரத்தத்தின் அளவும் குறைகிறது. இது சில சமயங் களில் இதயம் தமனிகள் முழுமையாக தடைப்படுவதால் இதயத் தசைகள் அவை இயங்குவதற்குத் தேவையான இரத்தத்தைப் பெறமுடியாமல் மடிந்துவிடுகின்றன. இறுதியில் மாரடைப்பால் (Heart Attack) பாதிக்கப்படும் நிலைக்கு நோயாளி தள்ளப்படுகிறார்.

எனவே நம் உடலில் தீமை தரும் கொலட்ரோல் அதிகமாக சேர்வதை நாம் தடுக்கவேண்டும். எந்த எந்தப் பொருட்களில் கொழுப்பு அதிகமாக உள்ளதென்று தெரிந்து கொண்டால் எதைத் தவிர்க்கலாம் என்பதும் புரிந்துவிடும். (தொடரும்)



வரலாற்றுப் புகழ் மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழாவில் முருகப் பெருமான் பக்த வெள்ளத்தின் நடுவே தேரில் வீதியுலா வருவதையும் பக்தர்கள் அங்கப் பிரதிட்சை, பாற்காவடி, பறவைக் காவடி என தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வதையும் படங்களில் காணலாம்.

### பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் கிரிக்கெட்

# பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தை வென்றது யாழ்ப்பாணம் பல்கலை அணி

(யாழ்ப்பாணம்)

ஜெரூபனின் சகலதுறையாட்டமும், சஞ்சீவனின் பந்துவீச்சும் கைகொடுக்க பற்றீசியின் விளையாட்டுக் கழகத்தினை வென்றது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட கழகங்களான கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி, பற்றீசியன் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகளுக்கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியினை வருடா வருடம் நடத்துகின்றது.

ஒன்பதாவது தடவையாக இவ்வாண்டு மேற்படி போட்டிகளை தற்போது நடத்தி வருகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பற்றீசியன் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து வந்தது பற்றீசியன் விளையாட்டுக்கழகம். சஞ்சீவன், ஜெரூபனின் பந்துவீச்சினை எதிர்கொள் முடியாமல் 24.3 ஓவர்களில் 73 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்தது பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி.

துடுப்பாட்டத்தில் எவரும் பெரிதாக பிரகாசிக்கவில்லை. பந்துவீச்சில் பல்கலை அணி சார்பாக சஞ்சீவன் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஜெரூபன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

74 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்குடன் பதிலுக்கு ஆடக் களமிறங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியில் ஒரு விக்கெட்டினை மாத்திரமிழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஜெயரூபன் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 35 ஓட்டங்களையும், பிரகாஸ் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (ச-5)

# தனது அன்புக் கணவன் பெண் என்பதை பத்து மாதங்களின் பின் அறிந்த மனைவி

### மாத்தறைப் பொலிஸில் முறையீடு

(மாத்தறை)

தனது கணவன் பெண் என்பதைப் பத்து மாதங்களின் பின்னர் அறிந்து கொண்ட மனைவி அதிர்ச்சியடைந்த நிலையில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளம் பெண் ஒருவர், தனது கணவர் உண்மையில் ஒரு பெண் என்பதைப் பத்து மாதங்களின் பின்னர் கண்டுபிடித்து அதிர்ச்சியடைந்ததுடன் இவ்விடயம் தொடர்பில் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

அச் சந்தேக நபர் மாத்தறை திக்கெல்லையைச் சேர்ந்த 30 வயதுப் பெண்ணாவார். அவர் தனது புகைப்படம் ஒன்றை போட்டோசொப் மூலம் ஆண் போன்று மாற்றிக் கொண்டு பாதிக்கப்பட்ட யுவதிக்கு அனுப்பியதாகவும் தான் இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவர் எனவும் அந்த யுவதியிடம் கூறியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த யுவதி கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி பெற்றோரின் சம்மதமின்றி சந்தேக நபரைத் திருமணம் செய்தாராம். ஆனால் சுமார் பத்து மாதங்கள் வரை தனது கணவர் ஒரு பெண் என்பதை அவர் அறியாமல் இருந்தமைதான் ஆச்சரியமானது.

ஆனால் அண்மையில் ஒருநாள் தனது கணவர் மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவரின் சாரம் கழன்று விழுந்து விட்டதாம்.

அப்பொழுதுதான் தான் வாழ்க்கையில் மிக முக்கிய விஷயங்களை இழந்திருப்பது மனைவிக்குத் தெரிய வந்ததாம். அதிர்ச்சியடைந்த அவர் தனது பெற்றோருக்கு இது குறித்துத் தெரிவித்ததுடன் மாத்தறை காந்தர பொலிஸ் நிலையத்திலும் புகார் செய்துள்ளார்.

அதையடுத்து ஆண் வேடம் இட்டுக் கணவராக நடித்த பெண் தலைமறைவாகியுள்ளார். அவரைப் பொலிஸார் வலைவீசித் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஜனாதிபதியின் ஊடகப் பிரிவில் 90 அதிகாரிகள் கடமையில்!

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுக்கு அதிகாரிகள் உட்பட 25 ஊழியர்கள் தேவையாக இருந்தபோதிலும் அந்த ஊடகப் பிரிவில் தற்போது ஏழு பணியாளர்கள், ஒரு ஊடகச் செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஆகியோரின் கீழ் 90 அதிகாரிகள் வரை பணியாற்றுவதாகத் தெரிய வருகின்றது.

லூஸியன் ராஜகருணாநாயக்க, மகிந்த இளையப்பெருமா, எம்.கே.ராகுலன், சுதத் சில்வா, சந்திரபால, லியனகே, சுகீஷஸ்வர சேனாதிர ஆகியோர் பணிப்பாளராகவும் ரஞ்சித் சில்வா பணிப்பாளர்களின் ஆலோசகராகவும் பத்மசிறி ராஜபக்ஷ ஊடகப் பிரிவின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் பணியாற்றுகின்றனர்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஊடகப் பிரிவில் மூன்று பணியாளர்கள் மாத்திரமே பணியாற்றி வந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கீழ் ஊடகப் பிரிவில் பணியாற்றிய அதிகாரிகள், ஊழியர்களுக்கு மேலதிகமாக தற்போதைய ஜனாதிபதி மேலும் அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமித்ததால் அந்த ஊடகப் பிரிவை நிர்வகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாக ஊடகப் பிரிவின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊடகப் பிரிவை நிர்வகிக்க உரிய அதிகாரிகள் இல்லாத நிலையில் ஊடகப் பிரிவை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பொறுப்பேற்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வுகள் தொடர்பான செய்தியைச் சேகரிக்கும் பணியில் ஒரு குழுவினர் ஈடுபடுவதுடன் அந்தச் செய்தியை மொழிபெயர்ப்புச் செய்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்க வேண்டும் என்ற போதிலும் ஜனாதிபதியின் வைபங்கள் தொடர்பான நிகழ்வுகளில் பணிப்பாளர்கள் சிலருடன் அதிகாரிகள் கலந்து கொள்வதால் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் வரை ஊடகப் பிரிவுக்குச் செலவிடப்பட வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

# விஸ்வமடு பாலியல் குற்ற வழக்கு எதிரிகள் மீது 30 குற்றச்சாட்டுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் விஸ்வமடு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பப் பெண்கள் மீது இழைக்கப்பட்ட பாலியல் குற்றம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எதிரிகளுக்கு எதிராக பொலிஸார் 30 குற்றச்சாட் டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

பாதுகாப்பற்ற வீட்டினுள் அத்து மீறி பிரவேசித்து பலாத்காரம் புரிந்தது, சம்பந்தப்பட்ட பெண்கள் மீது குற்றம் புரிந்தது உட்பட 30 தனித்தனியான குற்றச்சாட்டுக்கள் பட்டியலிடப்பட்டு இவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் கோரியுள்ளனர்.

இதனையடுத்து இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எதிர்வரும் 6 ஆம் திகதி விசாரணைகள் நடத்தப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போது எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். அவர்கள் சார்பிலான சட்டத்தரணியும் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தார்.

இந்த வழக்கில் சந்தேக நபர்களாகக் கைது செய்யப்பட்டிருந்த எதிரிகளான ஆறு இராணுவ வீரர்களில் 4 பேர் அடையாள அணிவகுப்பின் போது ஏற்கனவே சாட்சிகளினால் அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்பதும் அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது என்பது குறிப் பிடத்தக்கது. (ச-5)

# இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு நிதி சேகரிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவதற்காக மீண்டும் யாழ்ப்பாணம் செல்வோம் எனும் தொனிப் பொருளில் நிதி சேகரிக்கும் நடவடிக்கை ஒன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிதி சேகரிக்கும் நடவடிக்கையினை எம்.எப்.சீ.டி. அரச சார்பற்ற நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதன் முதற்கட்டமாக 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 100 வீடுகள் கட்டுதல், சேதமடைந்துள்ள 100 வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்து கொடுத்தல், வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு உதவுதல், தொழிற்பயிற்சி நிலையம் அமைத்து முக்கியமான கற்கை நெறிகளை பயிற்றுவித்தல், சிறு முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் ஒஸ்மானியா கல்லூரியை புனர்நிர்மாணம் செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு தலைமைதாங்கி உரையாற்றிய அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் மீள்குடியேற்றத்திற்காக அனைத்து முஸ்லிம்களும் ஒற்றுமைப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களை மீளக் குடியேற்றுவதற்காக அரசாங்கத்தின் உதவிகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்காமல் தங்களால் இயலு மானவற்றை மேற்கொள்வதன் மூலம் மிக விரைவில் அங்கு மக்களைக் மீளக் குடியமர்த்த முடியும்.

அரசு மீளக் குடியேற்றும் வரை காத்திருந்தால் இன்னும் எத்தனை வருடங்கள் செல்லும் என்றே தெரியாது என றிஸ்வி முப்தி மேலும், குறிப்பிட்டார்.

இதனை எம்.எப்.சி.டி. நிறுவனம் மாத்திரம் தான் மேற்கொள்ள வேண்டும் என்றில்லை. இயலுமான அனைத்து நிறுவனங்களும் இந் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட முடியும். அனைத்து முஸ்லிம்களும் ஒற்றுமைப்பட்டு இந்தப் பணியை மேற்கொள்வதன் மூலம் விரைவாக மேற்கொள்ள முடியும் இவ்வாறு அனைவரும் ஒற்றுமைப்பட்டு மேற் கொள்வதனால் அரசிடம் இருந்து உதவிகளைப் பெறுவதில்லை என்று அர்த்த மல்ல. அரசினால் வழங்கப்படும் உதவிகளையும் தாம் பெற வேண்டும் எனவும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## சர்வதேச...

போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நிலை மேம்பட்டுள்ளதாக குறிப்பிட்ட எயிட்கன், கொடுப்பனவின் உள்வருகையின் வீதம் உயர்ந்துள்ளதாக கூறியுள்ளார்.

பணவீக்க வீதம், இந்த வருடத்தில் ஒற்றை இலக்க எண்ணாகவே இருந்துள்ளது. (ச-5)

## மகிந்த-ரணில்...

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை முறையை நீக்கி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையை நடைமுறைப் படுத்துவது என்ற வாய்மூல உடன்பாட்டை ஜனாதிபதி பின்னர் மாற்றிக் கொண்டமை தொடர்பாக மீண்டும் பேசப்பட்டுள்ளது.

எனினும் இது சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரிலேயே தம்மால் முடிபெடுக்கப்பட்டதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையை கொண்டு வருவதானால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளமையையும் ஜனாதிபதி மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே இந்த விடயம் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இருவரும் சந்தித்த வேளையில் கலந்துரையாடப்பட்டிருந்தது. இதே வேளை 17 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்தும் நேற்று இருவரும் கலந்துரையாடினர்.

நேற்றைய சந்திப்பில் ஜனாதிபதியுடன், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தினேஸ்குணவர்த்தன உட்பட்டோரும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணிலுடன், பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் பங்கேற்றனர். (ச-5)

## ஆசிரியர் இடமாற்றத்தை...

வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களுக்கிடையில் கடந்த மாதம் 792 ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் இட மாற்றம் வழங்கப்பட்டது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு மடு ஆகிய வன்னி வலயக் கல்வி அலுவலகங்களைச் சேர்ந்த 232 ஆசிரியர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றனர்.

அத்துடன் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களின் கல்வி வலயங்களைச் சேர்ந்த 560 ஆசிரியர்கள் வன்னி கல்வி வலயங்களுக்கும் இடமாற்றம் பெற்றனர்.

இவ் இடமாற்றங்கள் அடுத்த மாதம் 6ஆம் திகதி மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பமாகும் போது அமுலாகுமென வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் என்பன இவ் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் பல குற்றச் சாட்டுக்களை முன்வைத்தன.

எனினும் இவ் ஆசிரியர் இடமாற்றத்தில் சில தவறுகள் நடந்திருப்பது அறியப்பட்டுள்ளது எனவும் அவ்வாறான தவறுகளை சீர் செய்வதற்கு ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் மேன் முறையீடுகள் பரிசீலிக்கப்படுமென வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்திருந்தார்.

இதற்கான மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் வலயக் கல்வி அலுவலகங்களினால் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இம் மேன்முறையீட்டு விண்ணப்பங்களை பரிசீலித்து தீர்வுவழங் குவதற்கான இடமாற்ற மேல் முறையீட்டு சபை நாளையும், நாளை மறுதினமும் கூட விருந்தது.

இந்நிலையில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டங்களுக்கிடையில் அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தை இடைநிறுத்தி கல்வி வலய ரீதியாக மீள் பரிசீலனை செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சிற்குட்பட்ட திணைக்களங்களின் வருடாந்த மீளாய்வு கூட்டத்தில் வைத்து வடக்கு மாகாணகல்வி அமைச்சின் செயலாளருக்கும் வடக்கு மாகா ணக் கல்விப் பணிப்பாளருக்கும் ஆளுநர் இப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

குறிப்பாகக்கஷ்டப்பிரதேசத்தில்கடமையாற்றிய ஆசிரியர்களுக்கும் மீண்டும் இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)


**நியூ சிற்றி றேடர்ஸ்**

சொனி, பனசொனிக், சொனிக்கா றேடியோ, கசற் றேக்கோடர், சொனி, பனசொனிக் 14", 21" கலர் ரீவி, டிஸ் ரீவி, ரிசிவர், சொனி, பனசொனிக், LG DVD பிளேயர், கார் றேடியோ, அம்பிலிவயர், வவல்ஸ், வூவர்ஸ் ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும், அவற்றைச் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி றேடர்ஸ்,
319A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3226
(C-907)


## புலிகளுக்கோ சர்வதேசத்...

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளுங்கள் அல்லது இல்லா தொழியுங்கள் என எதிர்க்கட்சியினர் கோருகின்றனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது யார்?

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் தோன்றுவதற்கு முன்னரே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது.

1980 களின் ஆரம்பத்தில் இதனை அறிமுகப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி அதன் மூலமே மக்கள் விடுதலை முன்னணியைக் கட்டுப்படுத்தியது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியவர் அதனை நீக்குமாறு இன்று வெளிநாட்டுக்குச் சென்று கோருகின்றனர் என்ன நிலையிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கமுடியாது என்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

புதைத்துவைத்துள்ள இடங்களிலிருந்து ஆயுதங்கள் இன்றுவரை மீட்கப்படுகின்றன. எனவே அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட இவ்வாறான சட்டங்களை மாற்றுமாறு கோருவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு என்ன அதிகாரம் உள்ளது?

இவ்வாறு கோரிக்கை விடுப்பதானது இலங்கையின் இறைமைக்கு ஏற்படுத்தும் அழுத்தம். விடுதலைப்புலிகளுக்கோ உலகில் எந்தவொரு நாட்டுக்கோ அரசாங்கம் அடிபணியப் போவதில்லை.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை ஏற்கத் தயாராக இல்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத் தங்களை மேற்கொள்ளுங்கள் அல்லது இல்லா தொழியுங்கள் என எதிர்க் கட்சியினர் கோருகின்றனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் தோன்றுவதற்கு முன்னரே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1980 களின் ஆரம்பத்தில் இதனை அறிமுகப்படுத்திய ஐக்கியதேசியக் கட்சி அதன் மூலமே மக்கள் விடுதலை முன்னணியைக் கட்டுப்படுத்தியது என்றார். (ச-5)

## வடக்கில் காணிகள் சுவீகரி...

இதன்போது பசில் எம்.பி.மேற்கண்ட வாறு தெரிவித்தார்,

ஜனாதிபதியுடனான இச் சந்திப்பின் போது வன்னியில் இருந்து வெளியேறிய மக்கள் தொடர்ந்தும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை,

மீள்குடியேற்றப்பட்ட மக்கள், சந்திக்கும் பல்வேறு இன்னல்கள், அவர்கள் எதிர்வரும் மழைக் காலத்தில் எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகள், அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள், என்பன குறித்து ஆயர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

இதன் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்படும் காலம் நீடித்துக்கொண்டு செல்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நிவாரணங்கள் மற்றும் புனர்வாழ்வளித்தல் நடவடிக்கைகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என ஆயர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி அரசாங்கத்திடம் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுபவம் உள்ளதால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாதென குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கில் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றமை தொடர்பாக ஆயர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தபோது அதியுயர்பாதுகாப்புவலயங்களில்உள்ள காணிகளுக்குப் பதிலாக உரிமையாளர்களுக்கு காணிகளோ அல்லது வேறு இடங்களோ வழங்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

காணிகள் சுவீகரிக்கப்படுகின்றமையை கொண்டு அந்த காணிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்படப் போகிறார்கள் எனக் கூறப்படும் காரணங்களை சந்திப்பில் பங்கேற்ற அமைச்சர் பசில் ராஜபக்ஷ மறுத்தார்.

வடக்குக் கிழக்கில் மாத்திரமன்றி ஏனைய பகுதிகளிலும் பொதுத் தேவைகளுக்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆயர்கள் கோரிக்கை விடுத்த போது இது விடயமாகத்தான் சட்டமா அதிபருடன் கலந்து ஆலோசிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா...

என்பவற்றையும் மேற்கொண்டனர். இவ்வாறு பக்தர்கள் பக்திபூர்வமாக இருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இவ்வாறு சுமார் 13 தங்கச் சங்கிலிகளும், ஒரு தாலிக்கொடியும் களவு போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு பெண்ணும் ஆணும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஆலயச் சூழலிலும் உட்பகுதியிலும் பொலிஸார்கடமையில் இருந்தபோதிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

தமது நகைகளை பறிகொடுத்தவர்களில் பெருமளவானோர் வயது முதிர்ந்த பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஆலயத் திருவிழாவுக்குச் செல்லும் போது கவரிங் நகைகளை அணிந்து செல்லுமாறு யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5,24)

## நாடாளுமன்ற உறுப்பின...

இராமாவில் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளதாகவும் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அன்பளிப்புக் களை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நலன்புரி நிலையங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கியுள்ளதாகவும் அவரது ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா இன்றைய தினம் களனி விகாரைக்கு வர்ணம் பூசுவதற்கான அனுசரணையை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது யாழ்.விஜயம் திட்டமிடப்படாதொன்று என தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அவர் உடனேயே கொழும்புக்குத் திரும்பியதாக கூறப்பட்டது. (ச-5)


**D-Link Routers**
Building Networks for People

உங்களுக்குத் தேவையான Broadband / ADSL Routers
3 வருட உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில்

தொடர்புகளுக்கு!
021 222 7835
0775578822
0776 155 048

> உங்கள் இடங்களிலேயே எங்கள் சேவைகள்
> விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
> SriLanka Tele com ADSL இணைப்புப் பெற்றவுடன் எம்முடன் இணையுங்கள்

**திருமுருகன் கொம் நெற்**
259, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
5,ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி · 44,மில் றோட் வவுனியா

Debug
Authorized Distributor in Jaffna.
(C-931)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.